Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, SEPTEMBER 22, 2023

வெள்ளிக்கிழமை செப்டெம்பர் 22, 2023 | ஒளி: 09 கதிர்: 090 | பக்கம்: 07 | நகரப்பதிப்பு | FREE



## தனுஷ்க வழக்கில் 28 அன்று தீர்ப்பு

இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக மீதான பாலியல் குற்றச்சாட்டு வழக்கின் விசாரணைகள் நிறைவடைந்துள்ள நிலையில், நீதிபதி சாரா ஹகெட், எதிர்வரும் வியாழக்கிழமை (28) தனது தீர்ப்பை வழங்கவுள்ளார். தொடர்ச்சி P2

## உரக் கொள்வனவுக்கு ரூ. 1,200 கோடி ஒதுக்கீடு



இந்தப் போக பயிர்ச்செய்கை காலத்தில் உரம் கொள்வனவு செய்வதற்கு 12,000 மில்லியன் ரூபாயை ஒதுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

மேலும், நெற்பயிர்ச் செய்கைக்கான உரம் கொள்வனவு செய்வற்கு ஒரு ஹெக்டேயருக்கு 15 ஆயிரம் ரூபாய் வீதம் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் பணம் வரவு வைக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். தொடர்ச்சி P2



அரசாங்கம் காலத்தை இழுத்தடித்தால்

## 2ஆவது சர்வதேச விசாரணைக்கு முகம் கொடுக்க நேரிடும்

குழுக்களை அமைப்பது முழு நாட்டையும் பாதிக்கும் என்று தெரிவித்த எதிர்க்கட்சி பிரதம கொரடாவும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல, இறுதிக்கட்ட யுத்தம் குறித்த சர்வதேச விசாரணை நடந்துவரும் நிலையில், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் காலத்தை இழுத்தடித்து அரசாங்கம் செயற்பட்டால், இரண்டாவது சர்வதேச விசாரணைக்கும் நாடு முகம்கொடுக்க நேரிடும் என்று தெரிவித்தார். தொடர்ச்சி P2

## பிள்ளையானை இன்னும் ஏன் விசாரிக்கவில்லை?

### நியாயத்தை எதிர்பார்க்கலாமா என நளின் கேள்வி



இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மீது பாரதூரமான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அவருக்கு எதிராக இதுவரை எந்தவிதமான விசாரணைகளும் முன்னெடுக்கப்படாத நிலையில், இந்த அரசாங்கத்திடமிருந்து நியாயத்தை எவ்வாறு எதிர்பார்க்க முடியும் என ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான நளின் பண்டார கேள்வி எழுப்பினார். தொடர்ச்சி P2

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலில்

# கோட்டா மைத்திரி முதலிரு சூத்திரதாரிகள்

**சபையில் தெரிவித்தார் சரத் பொன்சேகா**

**மைத்திரியுடன் கடும்தர்க்கம்; கடும் சொற்களும் பறந்தன**



ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் முதல் சூத்திரதாரி கோட்டாபய ராஜபக்ஷ என்றும் இரண்டாவது சூத்திரதாரி மைத்திரிபால சிறிசேன என்றும் தெரிவித்த முன்னாள் இராணுவத் தளபதியும் எம்.பியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஆராய்ந்த பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு முன்னிலையாகி மைத்திரிபால சிறிசேன பொய் கூறியதாகத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (21) இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான முதல் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த போதே கடும் தர்க்கம் ஏற்பட்டது.

சரத் பொன்சேகா எம்.பி தெரிவிக்கையில், “பயங்கரவாதி சஹ்ரானை வெளிநாட்டு சக்தி இயக்கியது என்பதை ஏற்க முடியாது. சஹ்ரானை இந்த நாட்டின் விஷக் கிருமி ஒன்று தான் இயக்கியுள்ளது. தொடர்ச்சி P2




## பிற்போடப்பட்டது உயர்தரப் பரீட்சை

### திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்

2023 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டு உள்ளதாகவும் திருத்தப்பட்ட திகதிகள் பரீட்சைகள் ஆணையாளரால் அடுத்த வாரம் அறிவிக்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில், வியாழக்கிழமை (21) தெரிவித்தார். தொடர்ச்சி P2

## தொங்கும் ‘சனல் 4’ கயிறு மரணக் கயிறாக மாறும்

### கம்மன்பில எம்.பி எச்சரிக்கை



அரசாங்கத்தை தாக்குவதாக கூறி, எமது இராணுவத்தினரையும் எமது தாய்நாட்டையும் தாக்குவதற்கு இடமளிக்க முடியாது என்றும் சனல் 4 கயிற்றில் தொங்கிக் கொண்டிருப்பவர்களுக்கு அது மரணக் கயிறாக மாறும் என்ற எச்சரிக்கையை விடுப்பதாக பிவித்துறு ஹெல உறுமய தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (21) இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான முதல் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணையை கோருபவர்கள் சில விடயங்களை புரிந்துகொள்ள வேண்டும். தொடர்ச்சி P2




## இலங்கைக்கு ஐஎம்எப் தலைவர் பாராட்டு

இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப அரசாங்கம் முன்னெடுத்துவரும் வேலைத்திட்டத்தின் முன்னேற்றத்தைப் பாராட்டிய சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா, இலங்கையில் பணவீக்கத்தைக் குறைத்ததுடன், நாட்டில் வர்த்தகத்திற்கு பொருத்தமான சூழலை உருவாக்கியமை மற்றும் சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார். தொடர்ச்சி P2

## ஜனாதிபதி செயலகத்துக்கு சபை அடிபணியக் கூடாது

### தலையிட அதிகாரம் இல்லை என்கிறார் கிரியெல்ல



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை அறிக்கை, பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பில் தலையிட ஜனாதிபதி செயலகத்துக்கு அதிகாரம் கிடையாதெனவும் பாராளுமன்றம், ஜனாதிபதி செயலகத்துக்கு அடிபணிந்து செயற்படக்கூடாது எனவும் எதிர்க்கட்சி பிரதம கொறடாவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். தொடர்ச்சி P2

சனல் 4 குற்றச்சாட்டுக்கு தெரிவுக்குழு அமைக்க

## ஆளும் எம்.பிக்கள் 20 பேர் சபாநாயகரிடம் கோரிக்கை



சனல் 4 ஊடகத்தால் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்துவதற்காக தெரிவுக் குழுவொன்றை அமைக்குமாறு ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் 20 பேரால் சபாநாயருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். தொடர்ச்சி P2

## முன்னர் எதற்கும் புலிகள் மேலேயே பழி சுமத்தினர்

### பழி போடும் வேலை இனி வேண்டாம் என்கிறார் செல்வம் எம்.பி



முன்னர் எது நடந்தாலும் நடக்கும் சம்பவங்களை தட்டிக்கழிக்கவே விடுதலைப் புலிகள் மீது பழியை போட்டு விடுவார்கள் என்றும் சம்பவங்களை கிடப்பில் போடுவதற்காக இந்தப் பழி போடும் வேலையை இனியும் செய்ய வேண்டாம் என்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.யும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (டெலோ) தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தினார். தொடர்ச்சி P2



## குறை வருமான நாடுகளுக்கு உடன் நிவாரணம் வழங்குக

### ஐ.நா தலைமையகத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு

கடன் வழங்குநர்களுக்கு நெருக்கடிகள் இருப்பதை தான் ஏற்றுக்கொள்வதாகவும் அதுகுறித்து கவனம் செலுத்த வேண்டும் என்றும் பரிந்துரைப்பதாகவும் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார். தொடர்ச்சி P2

நிலந்தவின் பெயர் விவகாரம்:

## அப்புஹாமியின் கருத்தை ஏற்றார் அமைச்சர் டிரான்

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையில், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் நிலந்த ஜயவர்தனவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (21) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்ததுடன், மேலும் தெரிவிக்கையில், புதன்கிழமை (20) தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## தனுஷ்க வழக்கில் 28 அன்று தீர்ப்பு

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற இருபதுக்கு 20 உலகக் கிண்ணத்தில் விளையாடுவதற்காக சென்ற தனுஷ்க, பெண்ணொருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக நான்கு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

ஒபரா ஹவுஸுக்கு அருகிலுள்ள ஒரு களியாட்ட விடுதியில் இருவரும் சந்தித்தமை மற்றும் அந்தப் பெண்ணின் வீட்டுக்கு சென்றமை குறித்து நியூ சவுத்வேல்ஸ் மாவட்ட நீதிமன்றம் விசாரணை நடத்தியிருந்தது.

இந்த வழக்கு குறித்து, நீண்ட விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில், எதிர்வரும் வியாழக்கிழமை (28) தீர்ப்பு வழங்கப்படவுள்ளது.

## உரக் கொள்வனவுக்கு ரூ. 1,200 கோடி ஒதுக்கீடு

அந்தத் தொகையில் விவசாயிகள் தங்கள் விருப்பப்படி இரசாயன உரங்கள் அல்லது இயற்கை உரங்களை வாங்க அனுமதிக்கப்படும்.

உரங்கள் தொடர்பான தற்போதைய நிலைமையை தெளிவுபடுத்திய அவர், அரசாங்கத்திடம் தேவையான அளவு எம்ஓபி உரம் மற்றும் யூரியா உரம் உள்ளதாகவும், டிஎஸ்பி உரம் தனியார் துறையினரால் வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

அரச உர நிறுவனங்களால் யூரியா உர மூடை ஒன்று 9 ஆயிரம் ரூபாய்க்கு வழங்கப்படும் என்றும் அதே விலையில் விவசாயிகளுக்கு யூரியா உரம் வழங்க தனியார் துறையும் ஒப்புக் கொண்டுள்ளதாக கூறினார்.

# கோட்டா, மைத்திரி முதலிரு சூத்திரதாரிகள்

2010 ஆம் ஆண்டுக்கு பின்னரே சஹ்ரான் அரசாங்கத்துடன் தொடர்புபடுகிறார். யுத்தக் காலத்தில் சஹ்ரான் இராணுவத்தினருக்கும்,தேசிய புலனாய்வு பிரிவுக்கும் எவ்விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கவில்லை. அவரது ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளவதற்கான தேவையும் இராணுவத்துக்கு இருக்கவில்லை.

2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரச புலனாய்வு பிரிவின் பிரதானியான பதவி வகித்த நிலந்த ஜயவர்தன, அப்போதைய ஜனாதிபதி மைத்திரியுடன் மிக நெருக்கமாக செயற்பட்டார். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான தகவல்கள், இந்திய புலனாய்வு பிரிவினர் ஊடாக நிலந்த ஜயவர்தனவுக்கு 2019 ஏப்ரல் மாதம் 04, 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் கிடைக்கப்பெற்றுள்ளன.

ஏப்ரல் 21ஆம் திகதி குண்டுத் தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் அப்போதைய ஜனாதிபதி மைத்திரி செயற்பட்ட விதம், பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. நிலந்த ஜயவர்தன அப்போதைய ஜனாதிபதி மைத்திரியுடன் ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று முறை தொலைபேசியில் உரையாடுவார்.

சில நேரங்களில் நேரடியாக சந்தித்தும் உரையாடுவார். 2019 புதுவருட பண்டிகையன்று நிலந்த ஜயவர்தன, மைத்திரிபால சிறிசேனவை நேரடியாக சந்தித்துள்ளார்.

அத்துடன் 2019. ஏப்ரல் 21ஆம் திகதி குண்டுத்தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர், மைத்திரி இந்தியாவுக்கு சென்ற போதும் நிலந்த அவரை சந்தித்துள்ளார். இந்தியாவில் இருந்து அதன் பின்னரே மைத்திரிபால, சிங்கப்பூர் சென்றுள்ளார். அதன்பின்னரே குண்டுகள் வெடித்தன" என்றார்.

இதன்போது குறுக்கிட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரி, "பொன்சேகா அப்பட்டமாக பொய்யுரைக்கிறார். சுரேஷ் சலே மலேசியாவில் இருந்தார். நான் இந்தியாவில் திருப்பதிக்கே சென்றேன். இராணுவ தலைமையகத்தை பாதுகாத்துக் கொள்ள முடியாத இவர் என் மீது குற்றச்சாட்டு களை முன்வைக்கிறார். குண்டுத் தாக்குதலில் சிக்கிய இவரை ஒரு வாகனத்திலும் இவரின் குடலை வேறொரு வாகனத்திலும் கொண்டு செல்லப்பட்டதை மறந்து விட்டார்" என்றார்.

மீண்டும் உரையாற்றிய சரத் பொன்சேகா, "இந்தப் பைத்தியம், இராணுவ தலைமையகம் தாக்கப்பட்டதையே தொடர்ந்து கூறுகிறது. வாயை மூடிக் கொள்ள வேண்டும். இல்லையேல் பல விடயங்களை வெளிப்படுத்துவேன்.

"குண்டுத்தாக்குதல் இடம்பெற்றதன் பின்னர், அரச தலைவர் என்ற ரீதியில் மைத்திரிபால சிறிசேன நாட்டுக்கு விரைவாக வரவில்லை. நாட்டு மக்கள் இரத்த வெள்ளத்தில் இருந்து முழு நாட்டையும் இருள் சூழ்ந்த பிறகு, இரவு 12 மணிக்கு நாட்டுக்கு வருகை தந்தார். சிங்கப்பூரில் இருந்து இலங்கைக்கு வர விமானம் இல்லை என்று இவர் குறிப்பிட்டது பொய். இவர் ஒன்றும் சாதாரண நபர் அல்ல; நாட்டின் ஜனாதிபதி. நினைத்திருந்தால் எப்படியும் நாட்டுக்கு வருகை தந்திருக்கலாம்" என்றார்.

## பிற்போடப்பட்டது உயர்தரப் பரீட்சை

நவம்பர் மாதம் 27 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி வரை பரீட்சை நடைபெறவுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்ட நிலையில், பரீட்சைக்கான நேர அட்டவணையை பரீட்சைகள் திணைக்களம் கடந்த 14ஆம் திகதி வெளியிட்டது.

எதிர்க்கட்சி உறுப்பினர் ரோஹினி விஜேரட்ன, உயர்தரப் பரீட்சையை ஜனவரி 22 முதல் பெப்ரவரி 17 வரையில் நடத்த முடியும் என்றும் மாணவர்களின் நன்மை கருதி பரீட்சையை பிற்போடுமாறும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், வியாழக்கிழமை (21) விசேட அறிவிப்பை விடுப்பதாக புதனன்று (20) சபையில் தெரிவித்திருந்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்தார்.

## தொங்கும் 'சனல் 4' கயிறு மரணக் கயிறாக மாறும்

அமெரிக்காவின் எப்பிஐ அமைப்பு இங்கே வந்தது. அவுஸ்திரேலியா பெடரல் பொலிஸ் வந்தது. அவர்கள் இங்கே விசாரணை நடத்தி அறிக்கையை முன்வைத்துள்ளனர்.

ஏன் அந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கேட்கின்றோம். இதேவேளை இந்தப் பிரச்சினைகளை மேற்குலக நாடுகளில் இருந்துகொண்டு இங்கே பிரிவினை வாதத்திற்கு முயல்பவர்களுக்கு இடமளித்துவிடக் கூடாது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் இரத்தம் மற்றும் கண்ணீரை அரசியல் லாபத்திற்காக மாற்றுவதற்கு கீழ்த்தரமான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. 2001 - 2004 காலத்தை போன்றும் 2015 காலத்தை போன்றும் புலனாய்வுத்துறையை வீழ்ச்சியடைய செய்து, இராணுவத்தினரை பலவீனமானவர்களாக்கி மீண்டும் நாட்டை இரத்த வெள்ளத்திற்குள் தள்ளும் முயற்சிகளுக்கு இடமளிக்க முடியாது" என்றார்.

## 2ஆவது சர்வதேச விசாரணைக்கு முகம் கொடுக்க நேரிடும்

தெரிவித்தார்.

சனல் 4 விவகாரம் தொடர்பில் தெரிவுக்குழுவை அமைப்பது குறித்து பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (21) ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் குறித்து ஏற்றுக்கொள்ளக் கூடிய உள்நாட்டு விசாரணையை முன்னெடுக்காவிட்டால் இது சர்வதேசத்திற்கு செல்லும். அப்படியென்றால் இரண்டு சர்வதேச விசாரணைகள் நடக்கும். ஏற்கெனவே இறுதிக்கட்ட யுத்த காலம் தொடர்பில் விசாரணை நடக்கின்றது. அது முடிந்துவிட்டதாக நினைக்கின்றனர். ஆனால் அது முடியவில்லை. கடந்த வருடமும் அதற்காக நிதி ஒதுக்கப்பட்டது. அலுவலமும் அமைக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தின் பின்னர் நீக்கப்பட்ட மேஜர் ஜெனரல்கள், எங்களுக்கு எதிராக சாட்சியமளிக்கின்றனர். அதனுடன் இப்போதுள்ள விடயமும் போகும். இதன்படி இரண்டு சர்வதேச விசாரணைகளுக்கு முகம்கொடுக்க வேண்டும். இப்படி இருந்தால் முதலீட்டாளர்கள் இங்கே வருவார்களா? இதனால் குழுக்களை அமைப்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். இது முழு நாட்டையும் பாதிப்புக்குள்ளேயே கொண்டு செல்லும்.

தாக்குதல் சம்பவத்தின் பின்னர் தொடர்பாக மலல்கொட ஆணைக்குழு மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழு ஆகியவற்றின் பரிந்துரைகள் செயற்படுத்தப்படவில்லை. பாராளுமன்ற தெரிவுக்குழுவும் இருந்தது. அதுவும் செயற்படவில்லை. இந்த அரசாங்கமும் பொதுஜன பெரமுன அரசாங்கமும் குழுக்களை அமைத்து சர்வதேச ரீதியில் பிரபலமடைந்துள்ளன. ஆனால் தீர்மானம் வந்தாலும் அதனை செயற்படுத்துவதில்லை.

தற்போதைய ஜனாதிபதி எங்களுடன் இருந்தவர். அவர் காலத்தை இழுத்தடிப்பதில் திறமையானவரே. எவரும் இங்கு அமைக்கப்படும் குழுக்கள் மீது நம்பிக்கை கொள்ளவில்லை. இவ்வாறான காலத்தை இழுத்தடிக்கும் விடயங்களுக்கு நாங்கள் எதிர்க்கிறோம்" என்றார்.

## இலங்கைக்கு ஐஎம்எப் தலைவர் பாராட்டு

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை கூட்டத் தொடருடன் இணைந்ததாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜோர்ஜீவாவுக்கும் இடையிலான சந்திப்பு நியூயோர்க்கில் உள்ள ஐ.நா சபையின் தலைமையகத்தில் புதன்கிழமை (20) இடம்பெற்றது. இலங்கையின் நிதித்துறை சீர்த்திருத்தங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருடன் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

## குறை வருமான நாடுகளுக்கு...

ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் புதன்கிழமை (20) நடைபெற்ற அபிவிருத்திக்கான நிதியுதவி தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடலில் ஆற்றிய சிறப்புரையிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஒரு பொதுவான கட்டமைப்பு அல்லது செயன்முறை இல்லாததன் விளைவாக நடுத்தர வருமானம் பெறும் நாடுகளின் அவலநிலை குறித்து சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உதாரணமாக, இலங்கை வங்குரோத்து நிலையை அறிவித்த பின்பு அனைத்து வெளிநாட்டு நிதி கொடுக்கல் வாங்கல்களும் நிறுத்தப்பட்டன.

இதன் காரணமாக பாரிய அரசியல் நெருக்கடியை சந்திக்க வேண்டியிருந்தாலும், அமெரிக்க அரசிடமிருந்து கிடைத்த பசளை நன்கொடையால் பல பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு, இலங்கை மீண்டும் முன்னேற்றப் பாதைக்கு திரும்பிக் கொண்டிருக்கிறது.

எனவே, நிதிச் நெருக்கடி காணப்படும் நடுத்தர வருமான நாடுகளுக்கு ஆதரவளிக்க முறையான திட்டம் தேவை என்பதை வலியுறுத்தும் அதேநேரம், அனைத்து முன்மொழிவுகளும் தொடர்பிலும் ஆராயப்பட வேண்டும்" என்றார்.

## அப்புஹாமியின் கருத்தை ஏற்றார்...

வாய்மூல விடைக்கான வினாக்களின் போது ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யான ஹெக்டர் அப்புஹாமி, ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு சமர்ப்பித்த அறிக்கையில் குற்றம்சாட்டப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் பெயர் அப்போது வகித்த பதவி மற்றும் சேவை நிலையம் தொடர்பிலான கேள்விகளை வினவினார்.

அறிக்கையில் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தனவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என அவர் கேள்வி எழுப்பினார். இதற்கு நான் அறிக்கையில் நிலந்த ஜயவர்தனவின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்று பதிலளித்தேன். இதனை நான் திருத்திக் கொள்கிறேன். அத்துடன் தவறான விடயத்தை குறிப்பிட்டதையிட்டு கவலையடைகிறேன். ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையில் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தனவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கிறேன்" என்றார். இதன்போது எழுந்த அப்புஹாமி எம்.பி, "நிலந்த ஜெயவர்தனவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யுமாறு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு பரிந்துரைக்கப்படவில்லை என்று கூறுவதனை ஏற்க முடியாது. மீண்டும் அறிக்கையை முழுமையாக ஆராய்ந்து பார்த்தால் அதுவும் தெரிய வரும்" என்றார்.

## ஜனாதிபதி செயலகத்துக்கு...

பாராளுமன்றம் வியாழக்கிழமை (21) காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியதையடுத்து, பிரதான நடவடிக்கையாக சபாநாயகரின் அறிவிப்பு இடம்பெற்றது.

இதன்போது சபாநாயகர் தனது அறிவிப்பில், "ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பந்தமான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை 2021ஆம் ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி பாராளுமன்ற செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. அத்துடன் அந்த அறிக்கை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் பயன்படுத்த பாராளுமன்ற நூலகத்தில் வைக்குமாறு ஜனாதிபதி செயலகம் அறிவித்தது.

அதேபோன்று, விசாரணை அறிக்கையில் இருக்கும் சாட்சியாளர்களை பாதுகாக்க வேண்டும். அதன் இரகசிய சாட்சியங்கள் அடங்கிய தகவல்கள் பொது மக்களுக்கு வெளிப்படுத்த முடியாது. பாராளுமன்ற செயலாளர்நாயகத்தின் கண்காணிப்பின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் பயன்படுத்த முடியும் என 2023.09.12ஆம் திகதி ஜனாதிபதி செயலாளர் மூலம் மீண்டும் அறிவித்திருக்கிறார்" என்றார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பிய லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி, "ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை அறிக்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், அது தொடர்பில் தலையிட ஜனாதிபதி செயலகத்துக்கு அதிகாரம் இல்லை. பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு கையளிக்கப்பட்ட பின்னர், அது தொடர்பில் தீர்மானிக்க வேண்டியது செயலாளர் நாயகம். அவ்வாறு இல்லாமல் அவர் ஜனாதிபதி செயலகத்திடம் கேட்கத் தேவையில்லை.

அத்துடன் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சாட்சியங்கள் அனைத்தும் திறந்த விசாரணை குழுவிலே தெரிவிக்கப்பட்டன. அப்படியானால் அந்த சாட்சியங்கள் எவ்வாறு இரகசியமான தகவல் என தெரிவிக்க முடியும்? " என்றார்.

## ஆளும் எம்.பிக்கள் 20 பேர்

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (21) விசேட அறிவித்தலொன்றை வெளியிட்ட அவர் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்ததுடன், அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"சனல் 4 ஊடகத்தால் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஒளிபரப்பிய நிகழ்ச்சியின் ஊடாக, முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்துவதற்காக தெரிவுக் குழுவொன்றை அமைக்குமாறு ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் 20 பேரால் சபாநாயருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி இது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் தெரிவுக்குழு அமைக்கப்பட்ட பின்னர் முன்னெடுக்கப்படும்.

இதற்கமைய தெரிவுக்குழு அமைக்கப்பட்டால் அதன்மூலம் ஜனாதிபதி ஆணைக்குழு, பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கை ஆகியவற்றை பெற்று, அவற்றை ஆராய்ந்து அவற்றை சாட்சிகளாக மாற்ற முடியுமென்றால் சட்டமா அதிபர் ஊடாக நடவடிக்கை எடுக்க முடியும்" என்றார்.

## முன்னர் எதற்கெடுத்தாலும்...

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட மக்களுக்காக தொடர்ந்தும் போராடி, சர்வதேச விசாரணை கோரும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, யுத்த காலத்தில் தமிழர் பகுதிகளிலுள்ள தேவாலயங்களில் தங்கியிருந்த போது, படுகொலை செய்யப்பட்ட எமது மக்கள் தொடர்பிலும் உரத்துக்குரல் கொடுக்க வேண்டும் என்றார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (21) இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சனல் 4 ஆவணப் படம் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் என்பதே அனைவரினதும் கருத்தாகவுள்ளது. அந்தவகையில் எமது ஆண்டகை மல்கம் ரஞ்சித்தை பாராட்டுகின்றேன். படுகொலை செய்யப்பட்டவர்களில் வெளிநாட்டவர்களும் இருப்பதால் உள்ளூர் விசாரணையை ஏற்றுக்கொள்ள முடியாது.

கர்தினாலுக்கு ஒரு பணிவான வேண்டுகோளை விடுக்கின்றேன். போர் காலத்தில், தேவாலயங்களில் தங்கி இருந்த மக்கள் கொத்துக் கொத்தாக படுகொலை செய்யப்பட்டார்கள். எமது பிரதேசங்களில் மனித உரிமைகள் மீறப்பட்டன.

ஆகவே உங்களுடைய நீதிகோரும், இந்த மனித நேயம் என்பது வடக்கு, கிழக்கிலே நடந்த படுகொலைகளுக்கும் தேவை. எமது மக்களுக்காகவும் உரத்து ஒலிக்க வேண்டுமென வேண்டுகின்றேன்" என்றார்.

## பிள்ளையானை இன்னும் ஏன் விசாரிக்கவில்லை?

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக அரசாங்கம் உண்மையை வெளிப்படுத்த வேண்டியது அவசியம் என்றார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (21) இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது; "கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டவுடன் சிவநேசதுரை சந்திரகாந்தன் விடுதலை செய்யப்பட்டார். கோட்டாவுக்கு ஆதரவாக செயற்பட்ட சுரேஷ் சலே புலனாய்வு பிரிவின் பிரதானியாக நியமிக்கப்பட்டார்.

தலதா மாளிகைக்கு குண்டுத் தாக்குதலை மேற்கொண்டவர், 600 பொலிஸாரை கொன்று குவித்தவர், திரிபோலி குழுவின் தலைவராக பதவி வகிப்பவர், இராஜாங்க அமைச்சராக பதவி வகிக்கும் போது ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதென்பது சந்தேகத்துக்குரியது என்றார்.



# தேசிய கல்வியியல் கல்லூரி அனுமதி மீண்டும் தாமதம்

## மெய்நிகர் தொழில்நுட்பம் ஊடாக முன்னெடுக்குமாறு கோரிக்கை

எஸ்.கே குமார்

தேசிய கல்வியியல் கல்லூரி மாணவர் அனுமதி, ஓகஸ்ட் 31 க்கு முன்னர் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்ட போதும் அதற்கான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்பட வில்லை என கல்லூரிக்கு தெரிவாகிய மாணவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இதுகுறித்து, தேசிய கல்வியல் கல்லூரிக்கு தெரிவான மாணவர்களால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்பதாவது; தேசிய கல்வியியல் கல்லூரிகளின் அனுமதிக்காக 2019/2020 ஆண்டுகளில் உயர் தரத்தில் தோற்றியவர்கள் இவ்வருடம் ( 2023) ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் நேர்முக தேர்வுக்கு அழைக்கப்பட்டு இருந்தனர்.

அதன்படி தெரிவு செய்யப்பட்ட 7,000 மாணவர்களின் பெயர் பட்டியல் 2023 ஜுலை மாதம் வெளியாகியது. தகைமை பெற்றவர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை ஒகஸ்ட் 31 க்கு முன்னர் நிறைவு செய்யுமாறு கல்வி அமைச்சின் செயலாளர், கல்வியியல் கல்லூரிகளின் பீடாதிபதிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இருந்தபோதிலும், இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் அதிகாரிகள் (கல்லூரி விரிவுரையாளர்கள்) சில கோரிக்கைகளை, கல்வி அமைச்சிடம் முன்வைத்து தொடர்ந்தும் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே கல்வி அமைச்சின் அறிவித்தல்கள் எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால் கல்வியியல் கல்லூரிக்கு தெரிவாகிய மாணவர்கள் பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாக, கல்வியியல் கல்லூரி கல்வியை நிறைவு செய்து வெளியேறும் போது 25, 26 வயதை எட்டுவதோடு, மாணவர்களை பதிவு செய்வது தொடர்பாக முறையான அறிவித்தல்கள் இல்லாமையால் பலர், தமது தொழில்களை கைவிட்டும், பலர் தொழில்களுக்கு செல்ல முடியாமலும் இருப்பதால் குடும்பத்தில் பாரிய பொருளாதார சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, மெய்நிகர் தொழில்நுட்பம் ஊடாக, கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கல்வியியல் கல்லூரிக்கு தெரிவாகிய மாணவர்கள் கோரிக்கை முன் வைத்துள்ளதாக ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 54 கிலோ மீற்றர் நடந்து சோழன் உலக சாதனை

எஸ்.சதீஸ்



பொகவந்தலாவை சென் மேரிஸ் மத்திய கல்லூரியில் 10ஆம் வகுப்பில் கல்வி கற்கும் 15 வயதான நிதர்சனா என்ற மாணவி 8 மணி 30 நிமிடங்களில் 54 கிலோ மீற்றர் தூரத்தினை நடந்துச்சென்று சோழன் உலக சாதனை படைத்துள்ளார்.

நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக, புதன்கிழமை (20) காலை 06:05 மணிக்கு சோழன் உலக சாதனை படைப்பதற்கான நடை பயணம் ஆரம்பிக்கப்பட்டது.

கினிகத்ஹேன, வட்டவளை, ஹட்டன், நோர்வூட், பொகவந்தலாவ நகரங்கள் ஊடாக, கடந்து பகல் 02 மணி 35 நிமிடங்களில் பொகவந்தலாவை சென் மேரிஸ் தேசிய கல்லூரியில் நிறைவடைந்தது.

அதிக ஏற்றம் கொண்ட மலையகப் வீதியில் இவர் எந்தவித ஓய்வும் இன்றி நடந்து சோழன் உலக சாதனை படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வுலக சாதனை முயற்சியை தொடக்கம் முதல் இறுதி வரை கண்காணித்து உலக சாதனையாக உறுதி செய்தார்கள் சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் இலங்கை கிளையின் துணைத் தலைவர் ஸ்ரீ நாகவாணி ராஜா, நுவரெலியா மாவட்டத் தலைவர் சாம்பசிவம் சதீஸ்குமார், கண்டி மாவட்டப் பொதுச் செயலாளர் சடையாம்பிள்ளை சந்திரமோகன் போன்றோர். சோழன் உலக சாதனைப் படைத்த மாணவிக்கும் அவரது மூன்று சகோதரிகளுக்கும் தேவையான கற்றல் உபகரணங்கள் மற்றும் காலணிகள் சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

சோழன் உலக சாதனை படைத்த மாணவியை கல்லூரியின் தலைமை ஆசிரியர் வேலுசாமி, அங்கு பணிபுரியும் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அரிமா சங்கத்தின் உறுப்பினர்கள் என பலரும் வாழ்த்திப் பாராட்டினார்கள்.



# மட்டக்களப்பில் ஓவியத் திருவிழா

ரீ.எல் ஜவ்பர்கான்

கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள, சுமார் 1,500 ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஓவியத் திருவிழா, நேற்று (21) மட்டக்களப்பு மகாத்மா காந்தி பூங்காவில் ஆரம்பமாகியது.

கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தலைமையில் ஆரம்பமான ஓவியத் திருவிழாவை, சுவாமி விவேகானந்தா அழகிய கற்கைகள் நிர்வக பணிப்பாளர் திருமதி கலாநிதி பாரதி கென்னடி பிரதம அதிதியாக கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

சனிக்கிழமை (23) நிறைவடையவுள்ள இந்த ஓவியத் திருவிழாவில், கிழக்கு மாகாணத்திலுள்ள ஓவியர்கள், பல்கலைக்கழகம் - பாடசாலை மாணவர்கள் ஆகியோரால் வரையப்பட்ட நவீன மற்றும் மரபு ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டு உள்ளன.



# மர்த்தனர் நியமனம்

அபு அலா

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் கீழுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளில் பல்வேறு பதவிகளில் கடமையாற்றி வந்தவர்களில், தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நடத்தப்பட்ட மர்த்தனர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 17 பேருக்கான பதவியுயர்வு நியமனங்களை, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கி வைத்தார்.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் டொக்டர் திருமதி இ. ஸ்ரீதர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஏழு பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஏழு பேரும், திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று பேரும் பதவியுயர்வை பெற்றுக்கொண்டனர்.



# ‘எஸ்எல்ரீ – பெற்றிகலோ கெம்பஸ்’ ஆகியது ‘பெற்றிகலோ கெம்பஸ்’

ஏ.எச்.ஏ ஹூஸைன்

‘பெற்றிகலோ கெம்பஸ்’ என்பது ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்துடன் கூட்டிணைந்து இயங்க இருப்பதால், ‘எஸ்எல்ரீ - பெற்றிகலோ கெம்பஸ்’ என அழைக்கப்படும் என கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநரும் பெற்றிகலோ கெம்பஸின் ஸ்தாபகருமான எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகம், படையினரிடம் இருந்து விடுவிக்கப்பட்டது தொடர்பாக, ஏறாவூரில் நேற்று (21) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் கருத்துத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறியதாவது:

ஈஸ்டர் குண்டு வெடிப்பால் நாடு பல பாதிப்புகளை எதிர்கொண்டது. மட்டக்களப்பு கெம்பஸ் மூடப்பட்டுக் கிடந்ததால், நாட்டுக்கு வரவேண்டியிருந்த 100 மில்லியன் டொலர் வருமானம் இல்லாமல் போய்விட்டது.

எஸ்எல்ரி - மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் தற்போதைக்கு சுமார் 3,000 தொடக்கம் 4,000 மாணவர்கள் பட்டப்படிப்புகளை மேற்கொள்ள வசதி உள்ளது. அதன் மூன்றாம் கட்ட நிர்மாணப் பணிகள் முடிவடைந்த பின்னர், சுமார் 20 ஆயிரம் மாணவர்கள் கற்கக் கூடிய, ஆசியாவின் சிறந்த பல்கலைக்கழகமாகத் திகழும். இது, தமிழ், முஸ்லிம், சிங்கள மாணவர்களுக்கும் வெளிநாட்டு மாணவர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாகும். 2024 ஜனவரியில் கற்கைகள் ஆரம்பிக்கப்படும் என்றார்.

# ஆசிரியர் மீது தலைக் கவசத்தால் தாக்குதல்

எச்.எம்.எம் பர்ஸான்

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட மீராவோடை அல் ஹிதாயா வித்தியாலய ஆசிரியர் மீது, நேற்று முன்தினம் (20) தலைக் கவசத்தால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரு மாணவர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாட்டை தீர்த்து வைக்க முற்பட்ட ஆசிரியர், மீதே இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த பாடசாலையில் க.பொ.த உயர் தரத்தில் கல்வி கற்கும் மாணவன், அவரது தந்தை உள்ளிட்ட குழுவினர் இரவு நேர கற்பித்தலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஆசிரியர் மீது தலைக் கவசத்தால் தாக்கியுள்ளனர்.

இத் தாக்குதலில் தலையில் பலத்த காயமடைந்த ஆசிரியர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இத்தாக்குதலுடன் தொடர்புபட்ட மாணவன் கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஆசிரியரை தாக்கிய குழுவினர் தலைமறைவாகியுள்ளனர். வாழைச்சேனை பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

புத்தளத்தில்

# வெள்ள அனர்த்தத்தைத் தடுக்க நடவடிக்கை

ரஸீன் ரஸ்மின்

புத்தளம் நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் வெள்ள அனர்த்தம் இடம்பெறுவதை தடுக்கும் முகமாக, புத்தளம் வெஸ்டன் சோல்டன் வீதி ஊடாக களப்புடன் இணையும் கால்வாய் துப்புரவு செய்யப்பட்டது.

இதன்போது , புத்தளம் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சிந்தக அமல் மாயாதுன்ன, புத்தளம் நகர சபை செயலாளர் எல்.பீ.ஜீ பிரீத்திகா, புத்தளம் பிரதேச செயலாளர் (பதில்) சம்பத் வீரசேகர உட்பட அதிகாரிகள் சமூகமளித்திருந்தனர்.

கடந்த வருடம் பெய்த கடும் மழை காரணமாக, புத்தளத்தில் பல இடங்களிலும் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டது. எனினும், தற்போது தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் வெள்ள அனர்த்தம் ஏற்படுவதை கட்டுப்படுத்தும் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



COLOMBO INTERNATIONAL BOOK FAIR
2023
COLOMBO INTERNATIONAL
BOOK FAIR
BMICH
SEP. OCT.
22-01
9 AM - 9 PM
ORGANIZER
ශ්‍රී ලංකා පොත් ප්‍රකාශකයන්ගේ සංගමය
Sri Lanka Book Publishers' Association
PRINCIPAL SPONSOR
SARASAVI THE BOOKSHOP
PLATINUM SPONSOR
Akura
GODAGE
RATHNA
Samudra Book Publishers
susara publication
PLATINUM SPONSOR
JEYA BOOK CENTRE (PVT) LTD
Knowledge Bank
M.D.GUNASENA
SAMAYAWARDHANA
OFFICIAL BANKER
Sampath Bank
PRINT MEDIA SPONSOR
SUNDAY TIMES
DailyMirror
தமிழ்Mirror
ELECTRONIC MEDIA SPONSOR
OFFICIAL RADIO PARTNER
91.4
OFFICIAL DIGITAL EDUCATION SPONSOR
DP EDUCATION
SRI LANKA'S LARGEST ONLINE SCHOOL
OFFICIAL DIGITAL MEDIA SPONSOR

# தேசத்தின் எதிர்காலச் சித்திரம் சிதையும் அபாயம்

மூன்றாம் உலகைச் சேர்ந்த ஒவ்வொரு நாட்டிலும் ஒரு பெரிய நோயாக இருக்கும் வறுமையால், பல துணை பிரச்சினைகளும் உருவாகி உள்ளன; அல்லது, உருவாக்கப்பட்டு உள்ளன. அதில், முதலாவது உணவுப் பற்றாக்குறை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு ஆகும். இலங்கையில் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள 15,763 குழந்தைகள் இருப்பதாக குடும்ப சுகாதார பணியகம் சமீபத்தில் தெரிவித்துள்ளது.

இலங்கையின் வருங்கால சந்ததியினர், இந்த வகையில் ஆபத்தில் சிக்கியிருப்பது பெரும் சோகத்தின் முன்னோடியாக உள்ளது என்பதைச் சொல்லத் தேவையில்லை. நாட்டின் எதிர்காலத்தை கையில் எடுக்கவிருக்கும் குழந்தைகள், கடுமையான ஊட்டடச் சத்துக் குறைபாட்டால் அவதிப்படுகின்றனர் என்றால், ‘தேசத்தின் எதிர்காலச் சித்திரம்’ எத்தகைய பாரிய ஆபத்தை எதிர்கொள்ளப் போகின்றது என்பது குறித்த அச்சம் பெரிதும் எழுந்துள்ளது.

கொழும்பு மாநகரப் பகுதியில் பெரும்பாலான குழந்தைகள் போசாக்கின்மையால் அவதிப்படுவதற்குப் பல காரணங்களை அடையாளம் காண முடியும். நகர்ப்புற வறுமை, அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்கள் பற்றிய அறிவின்மை, பெற்றோர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி இருத்தல், கல்வியின்மை போன்றவை இங்கு முன்வைக்கப்படும் முக்கிய காரணிகளாகக் காணப்படுகின்றன.

சிறுவர்களுக்கான ஊட்டச்சத்து குறைபாட்டுடன் அதிக எண்ணிக்கையிலான குறைந்த எடை கொண்ட குழந்தைகள் தொடர்ந்து பிறக்கின்றன. கடந்த வருடம் எடை குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கை 15.3 சதவீதமாக இருந்த நிலையில், இந்த வருடம் 17 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையும், எடை குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. 2022இல் 14.5% ஆக இருந்த எடை குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கை, இந்த ஆண்டு 15% ஆக அதிகரித்துள்ளது. இந்த நாட்டிலுள்ள சுமார் 47 இலட்சம் குடும்பங்கள், சமுர்த்தி காப்புறுதி அல்லது ஏனைய மானிய முறைமையால் வாழ்வாதாரத்தை மேற்கொள்ளவில்லை.

சமீபத்திய பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட் -19 பெருந்தொற்றுநோய் காரணமாக, நாட்டில் உணவு பாதுகாப்பு பிரச்சினை எழுந்துள்ளது. மக்களுக்கு சத்தான உணவு வழங்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் மற்றும் பெரிய பிரித்தானியாவில் உள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் ஆகியன உலகளாவிய ரீதியில் நடத்திய ஆய்வில், இலங்கையின் சனத்தொகையில் 55 சதவீதமானவர்கள் அல்லது சுமார் 123 இலட்சம் பேர், நாட்டின் பல பகுதிகளிலும் கடுமையான ஆபத்தில் உள்ளனர் என அறிக்கையிட்டுள்ளன.

குழந்தைகளிடையே கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்ய வேண்டியது அவசியம். நாட்டின் எதிர்காலத்தை பிள்ளைகளிடம் ஒப்படைக்கத் தயாராக இருக்கும் முதிய தலைமுறையினரை விட, இந்த நெருக்கடிக்கான தீர்வை அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளின் மூலம் வழங்க முடியும். எத்தனை கொள்கைகள், திட்டங்கள் இருந்தாலும், அதை முறையாக செயற்படுத்த வேண்டியது பொறுப்பு வாய்ந்தவர்களின் கடமையாகும் என்பதை நாம் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk
எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

வறுமை நிலையில் வாழும் பிள்ளைகளுக்கு, தாங்கள் முன்னேற வேண்டும் என்னும் எண்ணங்கள் வலுப்பெறுகின்றன.

கல்விமான்கள், தொழிலதிர்கள், தேசத்தலைவர்கள் எனப் பலரும் தமது இளமைக் காலத்தில் வறுமையில் எதிர்நீச்சலடித்தே முன்னேறினார்கள். சும்மா இருப்பவர்கள், வாழ்க்கையை வீணடிக்கிறார்கள்.

கல்வி ஒருசாராருக்கு மட்டும் உரித்தானதல்ல; ஆபிரிக்காவில் வாழும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த சிறுவனின் விடாமுயற்சியை தொலைக்காட்சியில் பார்த்தேன். தினமும் 50 கிலோ மீற்றர் தூரம், வெப்பம் மிகுந்த வெளியில் நடந்து சென்று, படித்து வந்தான். தண்ணீர் வளம் குறைந்த பிரதேசம். தண்ணீர் உள்ள இடம் நாடிக் குடித்தபடியே, நடந்து சென்ற காட்சி மனதைத் தொட்டது.

அவனை அந்தக் கிராம மக்கள் அன்புடன் படிக்க அனுப்புவார்கள். இரவில் விளக்கின் ஒளியில் கல்வி கற்றான். எந்த வசதியும் இல்லாத பிரதேசம். எம்மவர்கள் இதை உணர்ந்தால், கல்வி கற்பதில் உத்வேகம் பெறுவார்கள். மனோ வலிமை இருந்தால், காரியசித்தி உண்டாகும். வெல்க!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

### கறுப்பு ஜூலையின் 40 ஆண்டுகளின் பின்னர் –19:

# கேளாமலேயே கிடைத்த சுதந்திரம்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

பெப்ரவரி 4, 1948 இல் பிரித்தானியாவிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றது. இது எதிர்பாராதது. குறிப்பாக, பிரித்தானிய கொலனித்துவ ஆட்சியாளர்களிடம் ‘டொமினியன்’ அந்தஸ்தையே டி.எஸ் சேனாநாயக்க உள்ளிட்ட சிங்களத் தலைவர்கள் கோரி நின்றனர். ஆனால், அவர்கள் எதிர்பார்த்ததற்கு மேலாக பிரித்தானியக் கொலனியாதிக்கம், இலங்கைக்கு சுதந்திரத்தை வழங்கியது.

இலங்கையில் வளர்ச்சியடைந்து வந்த இடதுசாரிய கொலனிய எதிர்ப்பும் அதன் வழிப்பட்டதாக நாட்டையே உலுக்கிய 1947ஆம் ஆண்டு வேலை நிறுத்தமும் பல கேள்விகளை எழுப்பின. வேலை நிறுத்தம் கொடுங்கரங்களின் உதவியால் முறியடிக்கப்பட்டாலும் அதிகாரத்தின் மீதான மிகப்பாரிய தாக்குதலாக அது இருந்தது. நாடு தழுவிய இன்னொரு போராட்டம் ஆட்சியதிகாரத்தை வலுக்கட்டாயமாகப் பறித்துவிடுமோ என்ற அச்சவுணர்வும் இருந்தது. முதலுக்கு மோசமில்லாமல் ஆட்சியைக் கைமாற்ற நடவடிக்கைகள் தொடங்கின.

இவ்வாறு கிடைத்த சுதந்திரமானது, கொலனித்துவ ஆட்சியாளர்களிடமிருந்து ஆங்கிலமயமாக்கப்பட்ட மேல்தட்டு உயரடுக்கிற்கு ஆட்சியை அமைதியான முறையில் மாற்றிய நிகழ்வு என்றே நோக்க வேண்டியுள்ளது.

நாட்டின் அரசியல் தலைமைத்துவமானது ஒரு சில முக்கிய சிங்கள உயரடுக்கினரிடமே வழங்கப்படும் என்பதில் எந்தச் சந்தேகமும் இருக்கவில்லை. டி.பி ஜயதிலகவைத் தொடர்ந்து சட்ட சபையின் தலைவராக பதவியேற்ற டி.எஸ் சேனநாயக்க, சிறுபான்மை ஆதரவாளர்களை ஐக்கிய தேசிய கட்சியில் சேர்த்துக்கொள்ள முயற்சித்தார். இது உண்மையான அக்கறையால் அல்ல. பரந்துபட்ட வாக்குப்பலத்தை ஐ.தே.க பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் நினைத்தார். ஆனாலும் அவரின் இனவாதம் அதற்கு மிகப்பெரிய தடையாக இருந்தது.

1937இல் இலங்கைக்கான ஆளுநராக நியமிக்கப்பட்ட அன்ரூ கல்டிக்கொட், சிறுபான்மையினர் உரிமைகள் மீது அக்கறை கொண்ட ஒருவராக இருந்தார். இலங்கையில் பல முக்கியமான மாற்றங்கள் அவரது காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை பல்கலைக்கழகம், இலங்கை வங்கி என்பன அவரது காலத்திலேயே வந்தன. மலையகத் தமிழர் மீதான எதிர்ப்பு தொடர்ச்சியாக சட்டசபையில் வெளிப்படுவதை ஆளுநர் கண்டார். நவம்பர் 1940 இல், டி.எஸ் சேனநாயக்க, எஸ். டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா, ஜி.சி. எஸ் கொரேயா ஆகியோரை இலங்கையில் குடியேறிய இந்தியர்களின் நிலை குறித்து விவாதிக்க, புதுடெல்லிக்கு குழுவாக ஆளுநர் அனுப்பினார்.

இங்கு இரண்டு விடயங்கள் முக்கியமானவை. முதலாவது, மலையகத் தமிழ்ப் பிரதிநிதிகள் யாரும் அக்குழுவில் இருக்கவில்லை. எனவே, அவர்களின் நலன்கள் கருத்தில் எடுக்கப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்பட்டது.

இரண்டாவது, மலையகத் தமிழருக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்திருந்த சேனநாயக்கவும் பண்டாரநாயக்கவுமே இக்குழுவில் அங்கத்துவம் வகித்தனர் என்பது நியாயமான குற்றச்சாட்டாக இருந்தது. இனப்பிரச்சினையில் தீவிர நிலைப்பாடுகளை கொண்டிருந்த சிங்கள அரசியல்வாதிகள், சிங்கள ஆதரவுக்காகப் போட்டியிட்ட முதல் தடவையிலேயே ஒன்றாக மலையக மக்களை வெளியேற்றுவது பற்றிப் பேசியிருந்தார்கள்.

மலையக மக்களின் பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதற்காக, இலங்கை இந்திய காங்கிரஸும் பெரி சுந்தரம் தலைமையில் புது டெல்லிக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பியது, ஆனால், அதற்கு உத்தியோகபூர்வ அங்கிகாரம் இருக்கவில்லை. பண்டாரநாயக்கா, சேனநாயக்கா ஆகிய இருவரும் சட்டசபையில் இந்திய எதிர்ப்பு பேச்சுகள் மூலம் சிறுபான்மையினர் குறித்துத் தொடர்ச்சியாக சிங்கள மக்களிடம் முறையிட்டனர். இது சுதந்திரத்துக்கு முன்னமே சிங்களப் பெருந்தேசியவாதம் வளர்ச்சியடைந்திருந்தது என்பதை எடுத்துக் காட்டும் இன்னொரு நிகழ்வாகும்.

1943ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஜே.ஆர் ஜெயவர்தன, சிங்களத்தை அரச கரும மொழியாக்க தீர்மானம் கொண்டு வந்தார். பள்ளிகள் தங்கள் தாய்மொழியில் குழந்தைகளுக்கு கற்பிக்க அனுமதிக்கும் திருத்தங்களை அவர் ஆதரித்தார். அதே காலப்பகுதியில், தமிழ் பேசும் பகுதிகளில் தமிழை அதிகாரப்பூர்வ மொழியாக சேர்க்க வேண்டும் என்பதும் பரிந்துரைக்கப்பட்டது. ஜே.ஆர் ஜெயவர்தனவும் டி.எஸ் சேனநாயக்காவின் மகன் டட்லி சேனநாயக்காவும், தமிழுக்கு உத்தியோகபூர்வ அந்தஸ்து வழங்குவதை எதிர்த்தவர்களின் அச்சங்களுக்காகக் குரல் கொடுத்தனர். தமிழ்நாடு அருகாமையில் இருப்பது ஆபத்து என்றும், அது மொழிரீதியாக இலங்கை தமிழர்களை தமிழ்நாட்டுடன் இணையச் செய்யும் என்றும் எனவே,, தமிழுக்கு சம அந்தஸ்து வழங்கப்படக் கூடாது என்றும் வாதிட்டனர்.

ஏற்கெனவே புரையோடிப் போயிருந்த மலையகத் தமிழர் மீதான வெறுப்பு இதற்கு வலுச் சேர்த்தது. தமிழ்நாட்டில் இருந்து வரும் திரைப்படங்கள், இலக்கியங்கள், வானொலி ஒலிபரப்புகள் தமிழ் மொழிக்கு வலுச்சேர்க்கும் என்றும் இது இலங்கையில் சிங்களத்தை இறந்த மொழியாக மாற்றிவிடும் என்ற அச்சத்தை இருவரும் மக்கள் மத்தியில் விதைத்தனர்.

இலங்கையின் சுதந்திரத்திற்கான பாதை, ஏமாற்றும் வகையில் எளிதானதாக இருந்தது. ஏனைய பிரிட்டிஷ் கொலனிகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை தொடர்ச்சியாக ஆதிக்கம் செலுத்தக் கூடிய ஒன்றாக இருந்தது. இலங்கை தொடர்ந்தும் பிரித்தானியாவுக்கு விசுவாசமாக இருக்கும் என்பதில் எதுவித சந்தேகமும் ஆங்கிலேயர்களுக்கு இருக்கவில்லை. அவர்களைப் பொறுத்தவரை, ஏனைய கொலனிகளை விட இலங்கைக்கு சுதந்திரம் கொடுப்பது பயனுள்ளது என்று தோன்றியது.

இலங்கையின் பொருளாதார வளம் இதற்கான முக்கிய காரணியாக இருந்தது. முதலாவது இலங்கை இரண்டாம் உலகப் போரால் சேதமடையாமல் இருந்தது. இதனால் பொருளாதார ரீதியாக மீளக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை இருக்கவில்லை. இரண்டாவது, போர் முடிவுக்கு வந்த பின்னர், இலாபகரமான பெருந்தோட்டப் பொருளாதாரம் செழித்தது. எனவே, இவ்விரண்டும் நல்ல பண இருப்புகள் என்பதை கொலனிய நிர்வாகம் விளங்கியிருந்தது.

அதேவேளை, இலங்கையில் ஆட்சிக்கு வரத் தயாராக இருந்த தலைமை, பழைமைவாத மற்றும் ஜனநாயக அரசியலில் மற்றும் பிரிட்டிஷ் பாணி நிர்வாக கட்டமைப்பில் அனுபவம் வாய்ந்ததாக இருந்தது. மக்கள் ஒப்பீட்டளவில் நன்கு படித்தவர்களாகவும் ஆரோக்கியமாகவும் இருந்தனர். எனவே சுதந்திரம் வழங்குவதே பொருத்தமானது என்ற எண்ணம் இருந்தது. அதேவேளை, இலங்கை தேசிய காங்கிரசுக்கு ஒரே மாற்றாக இடதுசாரி ஆட்சிக்கவிழ்ப்பு மட்டுமே இருக்கும் என்ற இலங்கையின் பழைமைவாத உயர் வர்க்கங்களின் அச்சத்தை கொலனித்துவ அலுவலகமும் கொண்டிருந்தது.

இவை பொதுவான முன்முடிவுகளாக இருந்த போது, யதார்த்தம் வேறுபட்டதாக இருந்தது. பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் பாதுகாப்பு அகற்றப்பட்டபோது, தோட்டப் பொருளாதாரம் குறைந்த லாபம் ஈட்டியதால், பொருளாதாரம் பலவீனமாக இருந்தது. ஏற்றுமதி விலைகள் குறைந்து, அத்தியாவசிய உணவு இறக்குமதி விலை உயர்ந்ததால், வர்த்தக விதிமுறைகள் கொலனிக்கு எதிராக மாறின.

அரசியல் தலைமையானது முதன்மையாக ஒரு சில செல்வந்தர்களான கீழ்நாட்டு ‘கொவிகம’ குடும்பங்களில் இருந்து பெறப்பட்டது. சுகாதாரம், சமூகநலன், கல்வி ஆகியவை அவர்களின் கட்டுப்பாட்டை தக்கவைத்துக்கொள்வதற்கான அவர்களின் மூலோபாயத்தின் முக்கிய அம்சமாகும். புதிய தேசத்தின் எதிர்காலத்தில் முதலீடு செய்வதற்குத் தேவையான அரசாங்க வருவாயை இது உள்வாங்கியது.

சேனநாயக்கா தனது தலைமையிலான சிங்கள அரசாங்கத்தில் சிறுபான்மையினர் பாதுகாக்கப்படுவார்கள் என்று கொலனித்துவ அலுவலகத்தை நம்பவைத்தார், ஆனால், அதிகார மாற்றம் சமூகத்தை பிளவுபடுத்தும் அடிப்படை அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை. சிங்கள பௌத்தர்களின் வாக்குகள், தீவை யார் ஆள வேண்டும் என்பதை தீர்மானிக்கும் என்று பாராளுமன்ற அமைப்பு உத்தரவாதம் அளித்தது. இந்த வாக்காளர்களில் பலர், சுதந்திரமானது, கொலனி ஆதிக்கத்தின் கீழ் பௌத்தர்களின் உண்மையான மற்றும் கற்பனையான குறைகளை நிவர்த்தி செய்யும் ஓர் இழிவான சமூகத்தை மீண்டும் உருவாக்குவதற்கான சக்தியை தங்களுக்கு அளித்ததாக நம்புவதற்கு வழிவகுத்தது.

சிறுபான்மையினரின் உரிமைகளை அங்கிகரிப்பதன் அவசியத்தை சிங்களத் தலைவர்கள் விரும்பவில்லை. சிறுபான்மைத் சமூகங்களின் தலைவர்களும் பன்மைத்துவ இலங்கையை உருவாக்குவதை விட, தமது இன சமூகத்தையே நம்பியிருந்தனர்.

சேனநாயக்கா, இடதுசாரி எதிர்ப்பிற்கு எதிராக ஆங்கில மயமாக்கப்பட்ட உயரடுக்கின் பரந்த பிரிவை ஒன்றிணைத்து, புதிய தேசத்தை ஒன்றாக வைத்திருக்க முயன்றார். அவர் பிற கொலனித்துவ நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியலமைப்பு ஆட்சியின் முறிவைத் தவிர்த்தார். எவ்வாறாயினும், அதன் செயலிழந்த கொலனித்துவ மரபு - சிங்களம் மற்றும் தமிழ் தேசத்தில் ஆங்கிலம் பேசும் அரசாங்கம், அதிகப்படியான மையப்படுத்தப்பட்ட நிர்வாகம், பெருந்தோட்டப் பயிர்களின் ஏற்றுமதியில் பொருளாதாரச் சார்பு போன்றவற்றை முறியடிப்பதற்கு அவரிடம் பொருத்தமான தீர்வுகள் எதுவும் இல்லை.

அரசியல் அதிகாரத்தை பெரும்பான்மை சமூகத்தின் கைகளில் வைப்பதன் மூலம் அரசியலமைப்பே பிரச்சினைகளை அதிகப்படுத்தியது.

## கடிதங்கள்

### வவுனியாவில் நடைபாதைகளை ஆக்கிரமிக்கும் வியாபார நிலையங்கள்

வவுனியா நகர சபைக்கு உட்பட்ட இடங்களில் உள்ள நடைபாதைகளை சிறு வியாபார நிலையங்கள் ஆக்கிரமித்து உள்ளமையால் பாதசாரிகள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

வவுனியா பொது வைத்தியசாலை சந்தியில் இருந்து கொரவப்பத்தான வீதி, சந்தை உள்வட்ட வீதி என்பவற்றை, நடைபாதை வியாபாரிகள் ஆக்கிரமித்துள்ளமையால் பாதசாரிகள் விபத்துகளை சந்திக்கும் நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

வியாபாரிகள் நடைபாதைகளை ஆக்கிரமித்து தமது வியாபாரத்தை மேற்கொள்வதால் பாதசாரிகள் வீதியால் செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. சன நெருக்கடி நிறைந்த குறித்த பகுதியில், இவ்வாறான நிலைமை காணப்படுவதால் பெரும் வாகன நெரிசல் ஏற்படுவதுடன் விபத்துகளும் ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

இது தொடர்பில் கடந்த காலங்களில் நகர சபை நடவடிக்கை எடுத்திருந்தபோதிலும் அண்மைக்காலமாக நகர சபையும் இவ்விடயத்தில் தமது கண்காணிப்பை செலுத்தாமையால், தினந்தோறும் இவ்வாறான நடைபாதைகளை ஆக்கிரமிக்கும் வியாபார நிலையங்கள் அதிகரித்து செல்கின்றன.

எனவே, தற்போதைய பொருளாதார நெருக்கடியான நிலையில், சிறுவியாபாரிகளும் பாதிக்கப்படாத வகையில், பாதசாரிகளும் பாதிக்கப்படாத வகையில், நகர சபை சிறந்த தீர்வைக் காணவேண்டும் என வரியிறுப்பாளர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

–க. அகரன்




# Gem Sri Lanka மூலம் 'A Celebration of Gemstones' கண்காட்சி ஏற்பாடு

சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்கமானது (CGJTA) இலங்கையிலும், வெளிநாடுகளிலும் இயற்கையாக கிடைக்கின்ற பலதரப்பட்ட விலைமதிப்பற்ற இரத்தினக்கற்களை உள்நாட்டு மற்றும் சர்வதேச இரத்தினக்கல் வர்த்தக உலகிற்கு காண்பிக்கும் வகையில், 'Gem Sri Lanka' என்ற தலைப்பில் உலகத்தரம் வாய்ந்த வர்த்தகக் கண்காட்சியை முதன்முறையாக ஏற்பாடு செய்கின்றமை தொடர்பில் அறிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள ஷங்கிரி-லா ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வில், இலங்கையில் கிடைக்கின்ற பல்வேறு வகையான அரிதான, விலைமதிப்பற்ற இரத்தினக்கற்கள் மற்றும் அதன் மூலமாக எமது நாடு கொண்டுள்ள வர்த்தக வாய்ப்புகள் தொடர்பான அறிவை வெளி உலகிற்கு பரப்பும் நோக்கத்துடனேயே இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

CGJTA ஆல் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் செய்தியாளர் மாநாட்டில் உள்ளூர் ஊடகங்கள் மற்றும் பிரமுகர்கள் மற்றும் இலங்கை தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை (National Gem and Jewellery Authority of Sri Lanka - NGJA), இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை (Export Development Board of Sri Lanka - EDB) ஆகியவற்றின் பிரதிநிதிகள் மற்றும் 'Gem Sri Lanka' வர்த்தக கண்காட்சியின் நிர்வாக சபையின் அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். இக்கண்காட்சி நிகழ்வானது 2024 ஜனவரி 11 முதல் 13 வரை சினமன் பெந்தோட்டை பீச் ரிசோர்ட்டில் (Cinnamon Bentota Beach Resort) நடைபெறும்.

இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்த Gem Sri Lanka இன் தலைவர் ஹில்மி காசிம், "எமது தனிச்சிறப்புகளை வெளிக்கொண்டு வந்து, சர்வதேச சந்தைக்கு அவற்றைக் காண்பித்து, சர்வதேச மட்டத்தில் வர்த்தக வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான ஒரு சிறந்த மேடையாக Gem Sri Lanka வர்த்தகக் கண்காட்சியை ஏற்பாடு செய்வது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றின் முழுமையான ஆதரவையும், அங்கிகாரத்தையும் பெற்றுள்ள Gem Sri Lanka கண்காட்சி நிகழ்வானது, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இரத்தினக்கல் வர்த்தக சமூகத்தினரின் கவனத்தை ஈர்த்து, இரத்தினக்கல் வர்த்தகத்தைப் பொறுத்தவரையில் இலங்கையை ஒரு மையப்புள்ளியாக மாற்றி, ஒட்டுமொத்த உலகின் கவனத்தையும் ஈர்க்க வழிவகுக்கும் என நாம் நம்புகின்றோம். அத்துடன், Gem Sri Lanka கண்காட்சி நிகழ்வானது இலங்கையிலும், வெளிநாடுகளிலும் கிடைக்கும் அசல் இரத்தினக் கற்களின் அரிய மற்றும் தனித்துவமான பண்பினை உலகுக்குக் காண்பிக்கவும் உதவும்" என்றார்.

குறிப்பாக, இரத்தினக்கல் சம்பந்தமாக உள்நாட்டு வர்த்தக வாய்ப்புகள் மற்றும் அதன் சிறந்த பலன் குறித்து அறிவை மேம்படுத்துவதற்கு இக்கண்காட்சி உதவும். அத்துடன் வெளிநாட்டு கொள்வனவுகள் மற்றும் உள்நாட்டில் முக்கியமான கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளின் அதிகரிப்பானது, நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த உதவும் எனவும் அவர் குறிப்பிட்டார். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கொள்வனவாளர்கள் இரத்தினக்கற்களை கொள்வனவு செய்வதற்கான வாய்ப்புகளை Gem Sri Lanka கண்காட்சி நிகழ்வு தோற்றுவிக்கும்.

இலங்கையிலும், வெளிநாடுகளிலும் இயற்கையாகக் கிடைக்கும் விலைமதிப்பற்ற, அரிதான இரத்தினக் கற்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் அதேவேளையில் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் Gem Sri Lanka கண்காட்சி உதவும். சர்வதேச மற்றும் உள்ளூர் கொள்வனவாளர்களுக்கு ஒரே கூரையின் கீழ் அனைத்து வகையான இரத்தினக்கற்களையும் பார்த்து மற்றும் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்புகளுக்கு Gem Sri Lanka இடமளிக்கும்.




## Golden Tower வதிவிடத் தொகுதிக்கு SLT-MOBITEL ஃபைபர் வசதி

SLT-MOBITEL, Golden Tower (Pvt) Ltd. உடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. இல. 11, பொஸ்வெல் பிளேஸ், கொழும்பு - 6 எனும் முகவரியில் நிர்மாணிக்கப்படும் வதிவிடத் தொகுதிக்கு ஃபைபர் இணைப்பு வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

SLT நுகர்வோர் வியாபார ஆதரவு பொது முகாமையாளர் புஷ்பகுமார சமரசிங்க மற்றும் Golden Tower PVT LTD. பணிப்பாளர் சச்சிதானந்தன் ஸ்ரீஜயன் ஆகியோர் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதுடன், இந்நிகழ்வில் இரு நிறுவனங்களினதும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம், Golden Tower வதிவிடத் தொகுதியைச் சேர்ந்தவர்களுக்கு SLT-MOBITEL இன் மேம்படுத்தப்பட்ட ஃபைபர் இணைப்புகளையும், பரிபூரண தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகளையும் அனுபவிக்க முடியும். அதனூடாக, அவர்களுக்கு வேகமான மற்றும் அதிகளவு தங்கியிருக்கக்கூடிய இணைய வேகங்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த பங்காண்மை தொடர்பில் SLT நுகர்வோர் வியாபார ஆதரவு பொது முகாமையாளர் புஷ்பகுமார சமரசிங்க கருத்துத் தெரிவிக்கையில், "Golden Tower உடன் கைகோர்த்து, நவீன ஃபைபர் இணைப்பு வசதிகளையும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகளையும் வசிப்போருக்கு பெற்றுக் கொடுக்க முன்வந்துள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். எமது மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, நாட்டின் சகல பாகங்களிலும் டிஜிட்டல் மாற்றத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு SLT-MOBITEL ஐச் சேர்ந்த நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம்" என்றார்.

Golden Tower PVT LTD இன் பணிப்பாளர் சச்சிதானந்தன் ஸ்ரீஜயன் கருத்துத் தெரிவிக்கையில், "நவீன ஃபைபர் இணைப்பு மற்றும் தகவல் தொடர்பாடல் தீர்வுகள் போன்றவற்றினூடாக எமது வசிப்போரின் அனுபவத்தை மேம்படுத்தும் வகையில் SLT-MOBITEL உடன் கைகோர்த்துள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். வசிப்போருக்கு இந்த பங்காண்மை பெருமளவு பெறுமதியை ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதுடன், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் எனவும் நாம் எதிர்பார்க்கின்றோம்" என்றார்.

Golden Tower உடன் SLT-MOBITEL பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளமையானது, வாடிக்கையாளர்களுக்கு நவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்புக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.



## கொழும்பு துறைமுக நகரத்தில் 'Bairaha Chicken Cafe' உணவகம்

பைரஹா ஃபார்ம்ஸ் பிஎல்சி, தனது 'Bairaha Chicken Cafe' உணவகத்தை இலக்கம். 26, பீச் பிளாசா, துறைமுக நகரம், கொழும்பு - 01 என்ற முகவரியில் திறந்து வைத்துள்ளது.

50 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டில் அனைவரின் சுவையரும்புகளையும் திருப்திப்படுத்துவதில் நம்பிக்கையை வென்றெடுத்து, அனைத்து இல்லங்களிலும் உச்சரிக்கப்படுகின்ற வர்த்தக நாமம் என்ற சிறப்புடன், தினமும் காலை 11 மணி முதல் இரவு 11 மணி வரை Bairaha Chicken Cafe திறந்திருக்கும்.

இதனை திறந்து வைப்பது குறித்து பைரஹா ஃபார்ம்ஸ் பிஎல்சியின் தலைவர் றியாஸ் மிஹுலர் கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையில் நீண்டகாலமாக நிலைபெற்றுள்ள மிகப் பெரிய கோழி இறைச்சி மற்றும் அது சார்ந்த உற்பத்தியாளர்களில் ஒன்றாக இருப்பதால், கோழி இறைச்சி சார்ந்த பொருட்களை விரிவுபடுத்துவதற்கான எமது நோக்கமானது, கோழி இறைச்சி சார்ந்த பொருட்களை வழங்குவதுடன் மற்றும் மட்டுப்படுத்தப்படவில்லை. மாறாக, 'பண்ணையிலிருந்து உணவுத்தட்டு' வரை என்ற கோட்பாட்டுக்கு செயலாக்கம் அளிக்கும் வகையில், கடற்கரை சூழல் பின்னணியைக் கொண்ட கொழும்பு துறைமுக நகரத்தில் அமைந்துள்ள Bairaha Chicken Cafe இல் உள்ளவர்களும், விருந்தினர்களும் பைரஹா கோழி இறைச்சியின் உண்மையான சுவையை அனுபவிக்க முடியும்" என்று குறிப்பிட்டார்.



## ஏக்கம்

**********

கறுப்பு வெள்ளைப் புகைப்படம்
மனம் வெள்ளை
ஆனால் வறுமை வஞ்சிப்பதால்
சிறுமியவள் வதனத்திற்
புன்னகைக்குப் பெரும் பஞ்சம்

வறுமையின் ஏக்கம்
பசியின் ஆட்சி
தனிமையின் வேதனை
எனக் கனக்கும் ரணங்கள்

அவள் புன்னகை ஒளியைச்
சிறைப்பிடித்து இருளின்
ஆதிக்கம் சூழ் வாழ்வினைப்
பரிசளித்துச்
சென்றுவிட்டன .



குகதா,
கிளிநொச்சி



## பிழைக்கத் தெரியாதவர்

*******

கணக்காளர் பிழைப்பதற்கு
கனவழி உண்டு
பிணக்காக்கி பிழைப்பதனை
தடுப்பவர் உண்டு
வரிப்பணத்தில் வாழ்கின்றோம்
என்பதைச் சொல்லி
கரிப்பணத்தைக் கலந்துண்ணும்
கயவரே எங்கும்.

பகல்கொள்ளை அடிக்கின்றார்
பலபேர் கூடி
பம்மாத்தும் காட்டுகிறார்
பலதையும் மூடி
பக்தியென்று நடிக்கின்றார்
பலஇடம் ஓடி
பச்சையாக எடுக்கின்றார்
பற்றினைத் தேடி.

ஊழியரைச் சுரண்டுகின்ற
ஒப்பந்தம் செய்து
ஒன்றாகச் சேர்ந்தங்கு
உறிஞ்சியதில் குடித்து
வேதனைகள் படுவோரை
வெறுப்போடே பார்த்து
வேண்டியவர் வாழ்ந்திடவே
வேதாந்தம் உரைப்பார்.

நாக்காலும் கரத்தாலும்
நற்சுத்தம் பேணா
நன்மைகளை அனுபவிக்கும்
நாலுபேரும் சேர்ந்து
தாக்காமல் தாக்குவார்
தம்பிழைப்புக் கெட்டால்
ஆக்காமல் ஆக்குவார்
அதிலேதும் கண்டு.

என்வீட்டின் முன்னாலே
இருக்கின்ற கணக்காளர்
என்நேரம் பார்த்தாலும்
ஏன்வந்தோம் இங்கென்பார்
கன்னாளாய் பார்த்துவிட்டு
கதையினைநான் கேட்கவே
சொன்னவற்றைப்
பார்த்தாலே
பலர்சோற்றுக்குள்
பூசணி.



நீலையூர் சுதா

## அவள்

*******


முதல் முதலில் காதல் எனும்
பேனாவை கையில் எடுத்து..
வாழ்க்கை புத்தகத்தின்
முதல் பக்கத்தை திறந்தாள்..
அந்த பக்கமோ உன் கவிதைகளை
என்னில் நிரப்பிவிடு என்றது..


ஆனாலும் அவள் கவிதைகள்
நிறைவடையும் முன்பே
அந்த பக்கம் நிறைந்து விட்டது...
மறு பக்கத்தை தயக்கத்துடன்
திறந்தாள்
அந்த பக்கத்தின் மேற்பகுதியில்
யாரோ ஒருவர் கவிதை எழுதி
கிழித்து சென்றுவிட்டார்..

கீழ் பக்கத்தில் கிழிக்காமல்
என் கவிதைகளை நிரப்பிவிடுகிறேன்
என்றாள்..
நான் உனக்கான பக்கம் அல்ல
என்றது...
ஆனாலும் அவள் கவிதைகளை
முழுமையாக நிரப்ப
இறுதிப்பக்கமும்
காத்திருக்கலாம்...



சயனிகா ஸ்ரீகாந்த்





## பருத்தியின் மேகமாய்.!

*******

ஒரு
பட்டாம் பூச்சியின்
இறக்கையாக
சில நொடிகள்.....!

வெடித்த
பருத்தியின்
மேகமாய்
சில கணங்கள்.....!

புல்லின்
நுனியிலே
கர்ப்பம் தரித்த
பனித்துளியாய்
சில மணித்துளிகள்......!

இமை
வெட்டிடும்
நொடிதனில்
நினைவுகள்.....!

பல காவியம்
படைத்துச்
செல்கின்றது.....!

கனக. தீபகாந்தன்







கலாநிதி கா. இந்திரபாலா



# யார் இந்த 'எம்டன்'?

## முதலாம் உலகப் போர் தமிழுக்குக் கொடுத்த சொல்

செப்டெம்பர் 22, 1914. இரவு 9:45. சென்னைத் துறைமுகம் வழமைபோல் அமைதியாகக் காணப்பட்டது. மெதுவாகத் துறைமுகத்துக்குள் ஒரு கப்பல் புகுந்தது. திடீரென அதன் தேடல்விளக்கு ஒளி (search lights), முன் நின்ற கப்பல்கள் மீது பாய்ந்தது.

மிகப் பிரகாசமான ஒளியில் பர்மா பெற்றோலியக் கம்பனியின் எண்ணெய் தாங்கிகள் தென்பட்டன. திடீரென ஷெல்குண்டுகள் அத்தாங்கிகளை நோக்கிப் பாய்ந்தன. பத்து நிமிடங்களில் 135 குண்டுகள் பாய்ந்தன. மண்ணெண்ணெய் நிறைந்த தாங்கிகள் பற்றி எரிந்தன. ஒரு கணப்பொழுதில் 125 மில்லியன் கலன் (474 மில்லியன் லீற்றர்) மண்ணெண்ணெய் புகையாகியது.

அப்பால் இருந்த Madras Sailing Club கட்டடமும் சேதமடைந்தது. அதற்கு அருகே இருந்த பிரதான தபால் அலுவலகம், சென்னை உயர் நீதிமன்றம் ஆகியவற்றின் கட்டடங்களும் ஓரளவு சேதம் அடைந்தன. சென்னை செய்தித்தாள் 'மெட்றாஸ் மெயில்' அலுவலகத்தின் முன்னாலும் சில ஷெல் துண்டுகள் வீழ்ந்தன. குண்டுகளை வீசிய கப்பல் விரைவாக வெளியேறியது.

சென்னை துறைமுகப் பகுதியில் இருந்த மக்கள் திகைப்புடன் அல்லோலகல்லோலமாக ஓடினர். நடந்தது என்ன என்பதை அறிந்ததும், பல்லாயிரக் கணக்கான சென்னைவாசிகள் வாயில் "எம்டன், எம்டன்" என்ற வார்த்தை ஒலித்துக்கொண்டே இருந்தது.

அடுத்த சில நாள்களாகத் தென்இந்தியா முழுவதிலும், ஏன் வடக்கிலும் கூட, அப்பால் இலங்கையிலும் 'எம்டன்' என்ற சொல் ஒலித்துக்கொண்டே இருந்தது. அன்று தமிழ் வழக்கில் புகுந்த 'எம்டன்' என்ற சொல், இன்றுவரை ஒரு நிரந்தர இடத்தைப் பிடித்துள்ளது. தமிழில் மட்டுமல்ல, மலையாளத்திலும் 'யமண்டன்' என்ற வடிவைப் பெற்று வழங்குகிறது.

### யார் இந்த 'எம்டன்'?

1914 ஜூலை 28இல், கரும் போர் முகில் திரண்டு கொண்டிருந்த ஐரோப்பாவில், அவுஸ்திரிய-ஹங்கரிப் பேரரசு சேர்பியாவைத் தாக்கியதுடன் முதல் உலகப் போர் மூண்டது.

ஐரோப்பிய நாடுகள் ஒன்றையொன்று எதிர்க்கும், இரு பெரும் குழுக்களாகப் பிரிந்து போரில் இறங்கின. ஒருபுறம் உலகின் மிகப் பெரிய பேரரசாகிய பிரித்தானியப் பேரரசுடன், பிரெஞ்சுப் பேரரசு, ரஷ்யப் பேரரசு, இத்தாலிஆகிய நாடுகள். பின்னர், ஜப்பானும் அமெரிக்க ஐக்கிய அரசுகளும் இக் குழுவில் சேர்ந்தன. மறுபுறம், அவுஸ்திரியா-ஹங்கரியுடன், ஜெர்மனி மற்றும் ஒட்டொமன் (ஒஸ்மானில்) துருக்கியர் பேரரசும் சேர்ந்துகொண்டன.

பிரித்தானியப் பேரரசும் பிரெஞ்சுப் பேரரசும் உலகளாவிய வல்லரசுகள். ஜப்பான் கிழக்காசிய வல்லரசு. ஆகவே, ஐரோப்பியப் போர் உலகப் போராகியது. ஜெர்மனிக்கு ஆசியாவில் கொலனி எதுவும் இருக்கவில்லை. வலுவிழந்து காணப்பட்ட சீனாவில், பிற ஐரோப்பிய வல்லரசுகளைப் போல் ஜெர்மனியும் ஒரு சிறு நிலப்பகுதியைப் பெற்றிருந்தது.

### சீனாவில் ஜெர்மன் படைத்தளம்

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் கொலனித்துவ ஆதிக்கம் பெறும் ஆசையுடன் ஜெர்மனி, ஆசியாவுக்கு வந்தபோது, அங்கு எல்லா நாடுகளும் ஏதோ ஒரு வல்லரசின் கீழ் இருந்தன. சீனாவை முழுமையாக எந்த ஒரு வல்லரசும் கைப்பற்றாவிட்டாலும், வலுவிழந்து காணப்பட்ட பேரரசின் நிலங்களை, ஐரோப்பிய வல்லரசுகள் மட்டுமல்லாது அமெரிக்காவும் ஜப்பானும் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டன.

பிரித்தானியா, ஹொங்கொங் தீவைக் கைப்பற்றி அதனை 99 ஆண்டு கால குத்தகைக்குப் பெற்றது. அதேபோல், ஜெர்மனியும் ஜிஆச்சோ (Jiaozhou Bay) விரிகுடாப் பகுதியைக் கைப்பற்றி, 99 ஆண்டு கால குத்தகை ஒப்பந்தத்தைச் சீனப் பேரரசுடன் செய்துகொண்டது. அங்கு சிங்தாஓ (Tsingtau இப்பொழுது Qingdao) என்ற இடத்தில் ஜெர்மன் கடற்படைத் தளம் அமைக்கப்பட்டது.

### 'எம்டன்' போர்க் கப்பல்

1914இல் போர் தொடங்கியபோது, 'எம்டன்' என்ற பெயர் கொண்ட ஜெர்மன் போர்க் கப்பல், சிங்தாஓ கடற்படைத் தளத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் பெயர் ஜெர்மனியின் நகர் ஒன்றின் பெயரில் இருந்து பெறப்பட்டது. இக்கப்பலின் (Sea Captain) நாயகனாகப் பொறுப்பேற்றிருந்தவர் கார்ள் வொன் முய்ல்லர் என்பவர் ஆவர்.

போர் தொடங்கியபோது, ஜெர்மனியை எதிர்த்த வல்லரசுகளின் போர்க் கப்பல்கள், ஆசியாவின் பல பாகங்களில் நின்றன. ஆனால், ஜெர்மனிக்கு உரிய ஒரேயொரு போர்க் கப்பலாக 'எம்டன்' மட்டுமே இருந்தது. இந்நிலையில், எதிரிகளின் போர்க் கப்பல்களைத் தாக்கும் முயற்சிகளை நினைத்தும் பாராது, ஆசியாவை விட்டுவெளியேறி, ஐரோப்பாவுக்குச் சென்று ஜெர்மனிக்கு உதவுவதே உசிதமாகத் தோன்றியது.

### ஜெர்மனிக்குப் புறப்படுதல்

சீனாவில் இருந்த ஜெர்மன் கடற்படைத் தளத்தைக் கைவிட்டு, அதன் தளபதி தன் கப்பல்களுடன் பசுபிக் சமுத்திரம் வழியாக ஜெர்மனிக்குச் சென்று உதவலாம் என்ற நோக்கத்துடன் புறப்பட்டார். கார்ள் வொன் முய்ல்லர், மறு திசையில் 'எம்டன்' கப்பலை இந்து சமுத்திரம் வழியாகச் செலுத்தி, ஆபிரிக்காவின் 'நன்னம்பிக்கை முனை'யைத் தாண்டி, ஜெர்மனிக்குச் செல்லத் திட்டம் வகுத்தார்.

இந்து சமுத்திரத்தின் எல்லாப் பகுதிகளிலும் பகையரசுகளின் போர்க் கப்பல்கள் நின்றன. 'பிரித்தானியா அலைகடல்களை ஆள்கின்றது' (Brittannia rules the waves) என்ற புகழாரத்தைத் தங்கள் நாட்டுக்குப் பெற்றுக் கொடுத்த பிரித்தானியக் கடற்படையின் கப்பல்கள், போருக்குத் தயாராக எங்கும் காணப்பட்டன. இவற்றைத் தாண்டித் தனியொரு ஜெர்மன் கப்பல் தப்பிச் செல்வது இலகுவான செயலல்ல.

### எம்டனின் தீரச் செயல்கள்

பகையரசுகளின் போர்க் கப்பல்களைத் தாக்கிச் சேதம் விளைவிக்கும் நோக்கம் முய்ல்லருக்கு இருக்கவில்லை. மாறாக, அக் கப்பல்களிடம் அகப்படாமல் விலகிப்போய், வேறொரு வகையில் பகைவர்களுக்குச் சேதத்தை ஏற்படுத்த முய்ல்லர் திட்டமிட்டார். அவர் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

பகைவர் கண்ணுக்குப் படாமல் தப்பித்துக்கொள்ளும் பெரும் சவாலைவிட, கப்பலில் உள்ளவர்களுடைய உடல்நலத்தையும் மனநிலையையும் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு முய்ல்லரின் தோளில் சுமையாக இருந்தது. கப்பலில் 399 பேர் (வழமையிலும் பார்க்கக் கூடுதலான எண்ணிக்கை) இருந்தனர். இவர்களுக்குத் தேவையான உணவு சமைப்பதற்கு வேண்டியவற்றைப் பெறுவதற்கு, இந்து சமுத்திரத்தில் எந்த ஒரு துறைமுகத்துக்கும் செல்லமுடியாது. எல்லாமே பகைவர்களுடைய துறைமுகங்கள்.

'எம்டன்' நீராவிக் கப்பலாகையால் அதற்குத் தேவையான நிலக்கரியைப் பெறுவதும் இன்னொரு சவாலாக இருந்தது. வழமைபோல் 'எம்டன்' கப்பலுடன் அதற்கு எரிபொருள் கொடுக்கும் நிலக்கரிக் கப்பல் (collier) ஒன்றும் கூடவே வந்தபோதிலும், வழமைபோல் துறைமுகங்களுக்குச் சென்று (re-fuel) புது நிலக்கரியைப் பெற முடியாத நிலை காணப்பட்டது.

முய்ல்லர் மிகுந்த திறமையுடன் இச்சவால்களை எதிர்நோக்கினார். இந்து சமுத்திரத்தில் பகைவரின் கப்பல்கள், ஆசிய நாடுகளில் இருந்து போருக்குத் தேவையான பல பொருட்களை, ஐரோப்பாவுக்கு எடுத்துச் செல்லும் தீவிர முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில், இந்த முக்கியமான வர்த்தகத்தை முறியடித்து ஜெர்மனிக்கு உதவுவதே முய்ல்லரின் நோக்கமாக இருந்தது. இச்செயலில் பெருவெற்றி பெற்றமைதான் எம்டனுக்குப் புகழைப் பெற்றுக்கொடுத்தது.

### முதல் பலி

மூன்று வாரங்களின் பின்னர், 'எம்டன்' இந்து சமுத்திரத்தை அடைந்தது. எம்டனுக்கு மூன்று புனல்கள் (funnels) இருந்தன. ஆங்கிலேயரின் போர்க் கப்பல்களுக்குப் பொதுவாக நான்கு புனல்கள் இருந்தன. இதனால் எம்டனைப் பகைவர்கள் இலகுவில் அடையாளம் காணமுடியும் என்பதால், ஒரு போலிப் புனல், மூன்று புனல்களுக்கு அருகில் இணைக்கப்பட்டது.

1914ஆம் ஆண்டு செப்டெம்பர் முதல் வாரம், 'எம்டன்' வங்காள விரிகுடாவை அண்மித்தது. சிங்கப்பூர், கொழும்பு, ரங்கூன், சென்னை, கல்கத்தா, பம்பாய், அப்பால் செங்கடல் வழியாக, ஐரோப்பா செல்லும் கப்பல் பாதைகளை 'எம்டன்' அண்மித்தது. பகைவரின் கப்பல்களை வழிமறித்துத் தாக்குவதற்கு 'எம்டன்' தயாராகியது.

செப்டெம்பர் மாதம் எட்டாம் திகதி; இரவு 11 மணி. கப்பல் ஒன்றின் ஒளி தென்பட்டது. இருட்டுக் கண்ணாடி (night glasses) மூலம், அது வர்த்தகக் கப்பல் என அறிய முடிந்தது. 'எம்டன்' அதுக்குக் கிட்ட விரைந்தது. எம்டனில் இருந்து இரண்டு துப்பாக்கிச் சூடு. உடனே கப்பல் நின்றது. இந்து சமுத்திரத்தில் எம்டனின் ஆட்டங்கள் ஆரம்பித்தன.

அகப்பட்ட கப்பல், கல்கத்தாவில் இருந்து பம்பாய்க்கு 6,500 தொன் நிலக்கரியை ஏற்றிச் சென்ற கப்பல். எவ்வளவு அதிஷ்டம்!

செப்டெம்பர் மாதம், 10ஆம் திகதி. இன்னொரு கப்பலான SS Indus, பம்பாயை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. எம்டனிலிருந்து எச்சரிக்கைச் சூடு நிகழ்த்தப்பட்டது. கப்பல் நின்றது. கப்பலில் ஏற்றப்பட்டிருந்த இறைச்சி, காய்கறி, பழவகை, கோப்பி, தேயிலை மற்றும் உணவுப் பொருட்கள் அனைத்தும் எம்டனுக்கு மாற்றப்பட்டன. இரவு எம்டனில் பெரிய விருந்து. கப்பல் நாயகனும் அலுவலர்களும் எம்டனுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், அது மூழ்கடிக்கப்பட்டது.

### வர்த்தகம்

இந்து சமுத்திரம் முழுவதிலும் பீதி பரவியது. வர்த்தகக் கப்பல்களைச் செலுத்தியவர்கள், துறைமுகங்களில் இருந்து தம் கப்பல்களை வெளியே கொண்டுவர மறுத்தனர். வர்த்தகம் பெரிதும் பாதிக்கப்பட்டது. அடுத்த இரண்டு மாதங்களாக 'எம்டன்' இந்து சமுத்திரப் போக்குவரத்தை நிலைகுலைய வைத்தது. பிரித்தானியா, ஜப்பானியா, ரஷ்யா ஆகிய நாடுகளின் போர்க் கப்பல்கள் எம்டனைத் தேடிப் பிடிப்பதற்குத் துரித முயற்சிகள் எடுத்தும், அவற்றை (யாழ்ப்பாண வழக்கில்) 'உச்சிப்போட்டு', 'எம்டன்' தொடர்ந்தும் சேதம் விளைவித்தது.

ஒரு நாள் கல்கத்தா அருகே; மறுநாள் அந்தமான் தீவுகளில்; பின்னர் மாலைதீவுகளுக்கு அண்மையில் என்று அது பயணித்தது. செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதி, சென்னைத் துறைமுகத்தில் நின்றது. அதற்குப் பின்னர், மலாயாவின் (இன்றைய மலேஷியா) பினாங் துறைமுகத்தில் நங்கூரமிட்டு நின்ற ரஷ்யப் போர்க் கப்பல் Zhemchugஐ மூழ்கடித்தது. அதையடுத்துப் பிரெஞ்சுப் போர்க் கப்பல் Mousquet தாக்கப்பட்டுக் கடலில் மூழ்கடிக்கப்பட்டது.

இத்தனை திகிலடையச் செய்யும் தாக்குதல்களுக்கு மத்தியில், நகைப்புக்கு இடமளிக்கும் ஒரு நிகழ்ச்சியும் நடைபெற்றது. 'எம்டன்' கப்பலுக்குச் சில திருத்த வேலைகள் செய்யவேண்டி இருந்தது. அத்துடன், எம்டனில் இருந்த போராளிகளுக்குச் சிறிது ஓய்வு கொடுக்க வேண்டிய அவசியமும் இருந்தது. எந்தத் துறைமுகத்துக்கும் செல்லமுடியாத நிலையில், மாலைதீவுக்குத் தெற்கே இந்து சமுத்திரத்தின் நடுவில் இருந்த டியேகோ காசியா (Diego Garcia) தீவுக்குச் செல்ல முய்ல்லர் தீர்மானித்தார்.

### ஆங்கிலேயரின் நல்லுபசாரம்

டியேகோ காசியா ஆங்கிலேயருக்குச் சொந்தமான தீவு. இன்று அது அமெரிக்கருடைய கடற்படைத்தளமாக உள்ளது. 1914இல் ஒரு சில ஆங்கிலேய அதிகாரிகள், அங்கு தங்கியிருந்தார்கள். வெளியுலகில் நடப்பதையே அறியாது தூரத்தில் தனித்து நின்ற தீவு அது!

மிக்க துணிவுடன் இந்த ஆங்கிலேயர் தீவுக்குச் சென்றபோது, ஒரு நல்ல விடயம் தெரிய வந்தது. அங்கு இருந்தவர்களுக்கு, ஐரோப்பாவில் போர் தொடங்கிய செய்தியே வந்து சேரவில்லை. ஜெர்மனியும் பிரித்தானியாவும் போர் நடத்துவது தெரியாமல், எம்டனின் போராளிகளை ஆங்கிலேய அதிகாரிகள் நன்கு உபசரித்து, ஓய்வு பெற வசதிகள் கொடுத்து, எம்டனுக்குத் திருத்த வேலைகளைச் செய்யவும் அனுமதித்தனர். ஒரு வாரத்தின் பின்னர் ஆங்கிலேயருடைய போர்க் கப்பல் ஒன்று வந்தபோதுதான் நிலைமை தெரியவந்தது!

### கொக்கொஸ் தீவு

மிகவும் சாதுரியமாகப் பகைவர்களை ஏமாற்றி, வெற்றிகரமாக இருபதுக்கு மேற்பட்ட (ஓர் அறிக்கையின்படி 25) வர்த்தகக் கப்பல்களைக் கைப்பற்றி, அவற்றுள் பெரும்பாலானவற்றை மூழ்கடித்து, ரஷ்யப் போர்க் கப்பல் ஒன்றையும் பிரெஞ்சுப் போர்க் கப்பல் ஒன்றையும் சிதைத்த எம்டனைத் துரத்திப் பிடிப்பதற்காக, ஆங்கிலேயர் போர்க் கப்பல்களுக்கு உதவியாக ஜப்பானியரின் போர்க் கப்பலும் ருஷ்யரின் போர்க் கப்பலும் ஒன்று சேர்ந்தன.


சாதுரியமாக எப்பொழுதும் தப்பிக்கொண்ட 'எம்டன்' இறுதியில் (நவம்பர் மாதம் ஒன்பதாம் திகதி) கொக்கொஸ் (Cocos) தீவில் (இலங்கையில் இருந்து தென்கிழக்காக 2,850 கிலோ மீற்றர் தொலைவில்) அவுஸ்திரேலியாவின் இளம் கடற்படையின் HMAS Sydney என்ற கப்பலால் தாக்கி வீழ்த்தப்பட்டது.

அதன் அழகிய தோற்றத்தின் காரணமாக, 'கிழக்கின் அன்னம்' (Swan of the East) என்ற விருதைப் பெற்று, திகிலூட்டும் தாக்குதல்களை நடத்திய எம்டனின் வரலாறு முற்றுப்பெற்றது.


கார்ள் வொன் முய்ல்லர், போர்க்கால ஒழுக்கநெறிகளை இறுக்கமாகக் கடைப்பிடித்த ஒரு சிறந்த போர்க் கப்பல் நாயகன். கைப்பற்றப்பட்ட எதிரிப் போராளிகளை நன்கு கவனித்து, எல்லோரையும் கைப்பற்றிய கப்பல் ஒன்றில் கொழும்புக்கோ அல்லது வேறு கிட்ட இருந்த துறைக்கோ அனுப்பிவைத்தார். ஒரு கைதியாவது கொல்லப்படவில்லை. மிகுந்த கெட்டித்தனத்துடன், மூன்று மாதங்களாக ஆங்கிலேயரின் வர்த்தக நடவடிக்கைகளை முடங்கவைத்துத் தாய்நாட்டுக்கு உதவினார்.

கார்ள் வொன் முய்ல்லர் உண்மையில் ஓர் 'எம்டன்' தான்.


கார்ள் வொன் முய்ல்லர்


கொழும்பு துறைமுகத்தில் இருந்து 'எம்டன்' புறப்படும்போது...

Die „Sidney" mit den Überlebenden der „Emden" an Bord läuft in Colombo ein, rechts im Hintergrund der russische Kreuzer „Askold"





HMAS Sydney என்ற கப்பலால் 'எம்டன்' தாக்கி அழிக்கப்படும்போது...



சென்னை உயர் நீதிமன்றத்தின் சுவரில் ஏற்பட்ட சேதமும் தாக்குதல் குறித்த நினைவுகல்லும்



சம்பியன்ஸ் லீக்:

# யுனைட்டெட்டை வென்ற மியூனிச்




ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டுடனான போட்டியில் 4-3 என்ற கோல் கணக்கில் ஜேர்மனிய புண்டெஸ்லிகா கழகமான பயேர்ண் மியூனிச் வென்றது.

மியூனிச் சார்பாக, லெரோய் சனே, சேர்ஜி நர்பி, ஹரி கேன், மத்திஸ் டெல் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். யுனைட்டெட் சார்பாக கஸேமீரோ இரண்டு கோல்களையும், றஸ்முஸ் ஹொஜ்லுன்ட் ஒரு கோலையும் பெற்றனர். இதேவேளை, ஸ்பானிய லா லிகா கழகமான றியல் சொஸைடட்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலனுக்குமிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.



இந்தியா எதிர் அவுஸ்திரேலியா:

## ஒ.நா.ச.போ தொடர் இன்று ஆரம்பிக்கிறது

இந்திய, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது, மொஹாலியில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கிறது.

உலகக் கிண்ணத்துக்கு முன்னர் நடைபெறும் இத்தொடரானது இரண்டு அணிகளும் தமது இறுதிப் பதினொருவர் அணியை இறுதிப்படுத்திக் கொள்ள உதவும்.

இந்திய அணியைப் பொறுத்த வரையில் இரவிச்சந்திரன் அஷ்வின், வொஷிங்டன் சுந்தர், சூரியகுமார் யாதவ், ஷ்ரேயாஸ் ஐயர், திலக் வர்மா ஆகியோரைப் பரீட்சிப்பதுக்கான சந்தர்ப்பமாக இத்தொடர் காணப்படுகின்றது. அக்ஸர் பட்டேல் உபாதையிலிருந்து குணமடையத் தவறினால் அஷ்வினா அல்லது சுந்தரா என்ற தெளிவை வழங்குகின்றது. தவிர ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் தொடர்ந்து தடுமாறி வரும் சூரியகுமார் யாதவ்வை சஞ்சு சாம்ஸனுக்கு முன்னர் தெரிவு செய்ததை இத்தொடரிலாவது நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் அவர் உள்ளார். ஷ்ரேயாஸ் ஐயர் தனது உடற்றகுதியை நிரூபிக்க வேண்டியுள்ளார்.

மறுபக்கமாக அவுஸ்திரேலியாவில் காயத்திலிருந்து குணமடைந்து வரும் அணித்தலைவர் பற் கமின்ஸ், ஸ்டீவன் ஸ்மித், கிளென் மக்ஸ்வெல், மிற்செல் ஸ்டார்க் ஆகியோர் தமது உடற்றகுதியை நிரூபிக்க வேண்டியுள்ளது.


## லிவர்பூல் செல்லும் றொட்றிகோ?




இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான லிவர்பூலின் முன்களவீரரான மொஹமட் சாலா, அடுத்தாண்டு ஜனவரி மாதத்தில் வெளியேறினால், அக்கழகமானது ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட்டின் முன்களவீரரான றொட்றிகோவைக் கைச்சாத்திடும் எனக் கூறப்படுகிறது.

ஆசியப் போட்டிகளுக்கான

## இலங்கைக் குழாமில் வியாஸ்காந்த்




ஆசியப் போட்டிகளுக்கான இலங்கைக் குழாமில் யாழ்ப்பாணத்தின் விஜயகாந்த் வியாஸ்காந்த் இடம்பெற்றுள்ளார்.

இருபதுக்கு 20 போட்டி முறையிலேயே ஆசியப் போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில் நேரடியாக காலிறுதிப் போட்டிக்கு இலங்கை தகுதி பெற்றுள்ள நிலையில் அடுத்த மாதம் நான்காம் திகதி முதலாவது போட்டியை விளையாடவுள்ளது.

குழாம்: லசித் குறொஸ்புள்ளே, ஷெவோன் டேனியல், அஷேன் பண்டார, சஹான் ஆராச்சிகே (அணித்தலைவர்), அஹான் விக்ரமசிங்க, லஹிரு உதார (விக்கெட் காப்பாளர்), றவிந்து பெர்ணாண்டோ, ரனித லியனாராச்சி, நுவனிடு பெர்ணாண்டோ, சஷிந்த ஜயதிலக, விஜயகாந்த் வியாஸ்காந்த், நிமேஷ் விமுக்தி, லஹிரு சமரக்கோன், நுவான் துஷார, இஷித விஜேசுந்தர.

இங்கிலாந்து

## சாதனை படைத்த வெங்காயம்



இங்கிலாந்தில் இலையுதிர்கால மலர் கண்காட்சி ஒன்று ஹறோ கேட் நகரில் நடத்தப்பட்டுள்ளது. இதில் மிகப்பெரிய அளவிலான காய்கறிகள் மற்றும் மலர்கள் காட்சிப்படுத்தப்படும் .

அந்த வகையில் இங்கிலாந்து நாட்டின் வடக்கு யார்க்ஷயர் பகுதியை சேர்ந்த தோட்ட விவசாயி கரேத் கிரிபின் என்பவர் தனது தோட்டத்தில் விளைந்த பிரமாண்டமான வெங்காயத்தை கொண்டு வந்து காட்சிப்படுத்தியுள்ளார்.

அந்த வெங்காயம் 8.97 கிலோ கிராம் எடையைக் கொண்டதாக இருந்தது. மேலும் இந்த வெங்காயம் உலகிலேயே பெரிய வெங்காயம் என்று உலக சாதனையும் படைத்துள்ளது.

இந்தியா

# இந்தியாவுக்குள் நுழைய கனடா பிரஜைகளுக்குத் தடை



1980களில் சீக்கியர்களுக்கு "காலிஸ்தான்" என தனி நாடு கோரியதால், இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் பிரிவினைவாதம் தலைவிரித்தாடியது. இதனை அடுத்தடுத்த இந்திய அரசாங்கங்கள் பல கடுமையான நடவடிக்கைகள் மூலம் எதிர்கொண்டு அழித்தன. இருப்பினும், ஆங்காங்கே உலகின் பல இடங்களில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் இக்கோரிக்கைகளுடன் இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகளில் இன்னமும் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் குரல் கனடா நாட்டில் வலுப்பெற்றிருக்கிறது கடந்த ஜூன் மாதம், காலிஸ்தான் பிரிவினைவாதியும், தீவிரவாதியுமான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் என்பவர் கனடா நாட்டின் வேன்கூவர் நகரில் சுட்டு கொல்லப்பட்டார். இந்த கொலையில் இந்தியாவிற்கு பங்கிருப்பதாக சில தினங்களுக்கு முன் கனடா ஜனாதிபதி ஜஸ்டின் ட்ரூடோ பகிரங்கமாக குற்றஞ்சாட்டினார். தொடர் நடவடிக்கையாக இந்திய தூதரக அதிகாரியையும் கனடா அரசு வெளியேற்றியது. இந்தியர்களை அதிர வைத்த இந்த குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்த இந்திய அரசு, பதில் நடவடிக்கையாக இந்தியாவில் உள்ள கனடா நாட்டு தூதரை வெளியேறுமாறு உத்தரவிட்டது.

இந்நிலையில் கனடா நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வர விரும்பும் அந்நாட்டு குடிமக்களுக்கு இந்தியாவில் நுழைய வழங்கப்படும் "விசா" எனப்படும் உள்நுழையும் அனுமதியை இந்தியா தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

## கடன் கட்டாதோருக்கு 'சொக்லேட்' பரிசு



கடன் தவணையை உரிய திகதியில் திருப்பித் தராத வாடிக்கையாளர்களின் இல்லத்துக்கு சென்று 'சொக்லேட்' அளிக்கும் நூதன திட்டத்தை இந்தியாவின் மிகப்பெரிய வங்கியான பாரத ஸ்டேட் வங்கி (எஸ்.பி.ஐ.) அமல்படுத்தத் தொடங்கி உள்ளது.

**அத்தகைய அழைப்புகளை வாடிக்கையாளர்கள் தொடர்ந்து ஏற்காமல் இருப்பது, அவர்களுக்கு கடனைத் திருப்பி செலுத்தும் எண்ணம் இல்லை என்பதற்கான அறிகுறிகளாகக் கருதப்படுகிறது**

இதுகுறித்து வங்கி வட்டாரங்கள் தெரிவித்ததாவது: கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான மாதாந்த தவணைக் காலம் கடந்த பிறகும், அதற்கான தொகையைச் செலுத்தாத வாடிக்கையாளர்களுக்கு தொலைபேசி மூலம் வங்கி அழைப்பு விடுத்து வருகிறது. அத்தகைய அழைப்புகளை வாடிக்கையாளர்கள் தொடர்ந்து ஏற்காமல் இருப்பது, அவர்களுக்கு கடனைத் திருப்பி செலுத்தும் எண்ணம் இல்லை என்பதற்கான அறிகுறிகளாகக் கருதப்படுகிறது.

அதுபோன்ற வாடிக்கையாளர்களிடம் இருந்து கடன் தவணையை வசூலிப்பதற்கு, அவர்களது இல்லத்துக்கோ, அலுவலகத்துக்கோ முன்னறிவிப்பின்றி நேரில் செல்வதே சிறந்த வழியாகும். அதற்காக, சொக்லேட்டுகளுடன் வாடிக்கையாளர்களின் இல்லத்துக்கு வசூல் அதிகாரிகளை அனுப்பும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்று வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

பெல்ஜியம்

## பாரம்பரிய சிலையை உடைத்தவருக்கு அபராதம்

பெல்ஜியம் நாட்டில் புராதன சின்னங்கள் மற்றும் பாரம்பரிய சிலைகள் அங்குள்ள ஒரு மையத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. சமீபத்தில் மிகவும் பழமையான சில சிலைகளை சீரமைப்பு திட்டத்தின் கீழ் புதுப்பித்து வைத்திருந்தனர்.

இந்நிலையில் ஐரிஷ் நாட்டை சேர்ந்த சுற்றுலாப் பயணி ஒருவர் அந்த மையத்துக்கு சென்று சிலைகளை பார்வையிட்டுள்ளார். அப்போது அங்கு பாரம்பரியமிக்க 2 சிங்கங்கள் கொண்ட சிலை மற்றும் ஜோதியுடன் ஒரு மனிதனை கொண்ட சிலை ஆகியவற்றை பார்வையிட்டதோடு, அந்த சிலைகளின் மீது ஏறி அமர்ந்துள்ளார்.

அப்போது அதில் ஒரு சிலை உடைந்து விழுந்துள்ளது. இதைனையடுத்து. சேதப்படுத்தப்பட்ட சிலையின் மதிப்பு ரூ.16 இலட்சம் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதுகுறித்து விசாரணை நடத்திய பொலிஸார் சிலையை சேதப்படுத்திய சுற்றுலாப் பயணியை கைது செய்து சிலையை புதுப்பிக்க ரூ.16 இலட்சத்தை அபராதமாக விதித்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

ஆந்திரா

## மாணவிகள் எட்டு பேருக்கு சிகையலங்காரம் செய்த ஆசிரியை



ஆந்திர மாநிலம், காக்கிநாடா, சர்வே பாடசாலை என்ற அரசு உயர்நிலை ப்பாடசாலை உள்ளது. இந்த பாடசாலையில் படிக்கும் மாணவிகள் அழகாக தலை சீவி, ஜடை பின்னல் போட்டு வர வேண்டும் என விதிமுறை உள்ளது.

ஆனால் அந்த பாடசாலையில் படிக்கும் 9-ம் வகுப்பு மாணவிகள் 8 பேர் தலைவிரி கோலமாக பாடசாலைக்கு வந்துள்ளனர். அப்போது வகுப்புக்கு வந்த ஆசிரியை மாணவிகளின் தலைவிரி கோலத்தைக் கண்டு ஆத்திரம் அடைந்து, தலைமை ஆசிரியர் அறைக்கு சென்று அங்கிருந்த கத்திரிக்கோலை எடுத்து வந்து, 8 மாணவிகளை வரிசையாக நிற்க வைத்து அவர்களது முடியை ஒட்ட வெட்டியுள்ளார்.

இதனை கண்ட சக மாணவிகள் அவர்களை கிண்டல் கேலி செய்துள்ளனர். இதனால் கவலையடைந்த மாணவிகள் வீட்டிற்கு சென்று பெற்றோர்களிடம் இதுகுறித்து தெரிவித்துள்ளனர். தங்களது மகள்களின் கோலத்தைக் கண்ட பெற்றோர்கள் அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாக பாடசாலைக்கு வந்த அவர்கள் மாணவிகளின் முடியை வெட்டிய ஆசிரியை மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டனர்.



சுவிட்சர்லாந்து

# பெண்கள் புர்கா அணியத் தடை

ஐரோப்பிய நாடான சுவிட்சர்லாந்து பொதுவெளிகளில் பெண்கள், தங்கள் முகத்தை மறைக்க அணியும் புர்கா போன்ற உடைகளுக்கு தடை விதிக்கும், சட்டத்தை அமல்படுத்தி உள்ளது. இந்த சட்டம் சுவிட்சர்லாந்து பாராளுமன்றத்தில் 151-29 என்ற அடிப்படையில் நிறைவேறியது, இது ஏற்கெனவே மேலவையால் அங்கீகரிக்கப்பட்டது.

இந்த சட்டம் அமலுக்கு வந்தால், உணவகங்கள், விளையாட்டு மைதானங்கள், பொது போக்குவரத்து, சாலைகளில் நடந்து செல்லும்போது என, அனைத்து பொது இடங்களிலும் புர்கா அணிய தடை விதிக்கப்படும்.

எனினும், மத வழிபாட்டுத் தலங்களில், இதற்கு தடை விதிக்கப்படாது என கூறப்படுகிறது. தடையை மீறுபவர்களுக்கு சுவிட்சர்லாந்தின் 1,000 பிராங்குகள் வரை அபராதம் விதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமாபாத்

# பாகிஸ்தானில் ஜனவரி பொதுத்தேர்தல்

பாகிஸ்தானில் வரும் ஜனவரி மாதம் பொதுத்தேர்தல் நடைபெறும் என்று அந்த நாட்டு தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் பாராளுமன்றம் கடந்த ஓகஸ்ட் மாதம் கலைக்கப்பட்டது.தற்போது பாகிஸ்தானில் காபந்து பிரதமராக எம்பி அன்வர்-உல்-ஹக் கக்கர் உள்ளார்.

பொதுத்தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஒக்டோபர் மாதம் தேர்தல் முதலில் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட நிலையில் தற்போது ஜனவரி மாதம் தேர்தல் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 22 செப்டெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.